விடியல்

# விடியல்

கலை, அரசியல், சமூக இதழ்

புரட்டாதி, ஐப்பசி - இதழ் - 03





Rs.50/=


லட்சுமி றேடிங் கொம்லக்ஸ்
Ladsumy Trading Complex
Furnitures & Electronice
Richsonic
தளபாடங்கள் மற்றும்
இலத்திரனியல் சாதனங்களை
தரமான முறையில் பெற்றுக்கொள்ள
நீங்கள் செல்ல வேண்டிய இடம்
T.P. No. 0773431491, 021 226 5746
பருத்தித்துறை வீதி, மந்திகை.

# விடியல்

கலை, அரசியல், சமூக இதழ்

திசை – 01 இதழ் – 03

புரட்டாதி 2018

பிரதம ஆசிரியர் : அ.சசி
உதவி ஆசிரியர் : வத்தையூரான்

விலை : 50/–

பதிப்பு : ரூபன் பதிப்பகம்,
ஆனைக்கோட்டை, சந்தி,
ஆனைக்கோட்டை.

பக்க அட்டை வடிவமைப்பு : வெ.மகிந்தன்



முகவரி : இல. 24 பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Face book : விடியல் விடியல்

vidiyalmagazine@gmail.com
T.P No. 0702083803


## மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்

வாக்குறுதிகள் அள்ளி வீசி வாய்க்கு இதமான கதைகளையும் சொல்லி பார்த்துக் கொண்டிருக்க முடிந்தது காலம். 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தின் பிடியில் இருந்து மெல்ல துளிர் விடுகின்ற ஆலமரமாகிய வடமாகாணத்தின் விழுதுகள் மண்ணில் படர விருட்சமாக வளர்ந்துவரும் பறவைகள், விலங்குகள் மட்டும் அல்லாது வழிப்போக்கர் இளைப்பாறி ஊரவர்களுக்கும் செழிப்பான நிழல் தந்து வாழ்க்கைக்கு உதவிடும் இந்த விருட்சம் என்று கற்பனைகள் பல செய்திருந்த மக்களை வயிற்றெரிச்சல் ஊட்டிய செயற்பாடுகள் எல்லாம் நடந்து முடிவடைகின்ற விளையாட்டு போட்டியாகி போய்விட்டது. எம்மக்களின் நிலைமைகளை கருத்தில் கொள்ளாது மாதம் மாதமாக தீர்மானங்கள் நிறைவேற்றிவிட்டு குப்பை தொட்டி களாக மாகாண சபையை மக்களிடம் காட்டிவிட்டு ஒரு நாளைக்கு ஒரு கதை பேசிக்கொண்டு மீண்டும் வாக்குறுதிகளை வழங்க தயாராகி மாகாண சபை நிதியினை செலவழிக்க தெரியாமல் திருப்பி அனுப்பிய தற்கும் 7000 மேற்பட்ட குடும்பங்கள் வயிற்றில் அடிக்கும் செயலாகிய வேலை வாய்ப்பை மூடிமறைத்து செய்ய வேண்டியதை உரியகாலத்தில் செய்யாமல் மீண்டும் வாக்கு போடுங்கள் என விடுகதைகளை விட்டுக்கொண்டு வருபவர்களுக்கும் மக்கள் தரும் பரிசு வாழ்க்கை பாடத்தில் மறக்க முடியாத அத்தியாயமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# உண்மையை எழுதுவது தான் ஊடக சுதந்திரம், திரிபுபடுத்தி எழுதுவதல்ல




மைத்திரியின் நல்லாட்சி பற்றி சொன்னவுடனேயே தலைவர் சேனாதிராஜா அருகிலிருந்து சொன்னது அவ்வாறு நாங்கள் சொல்வதில்லையே என்பதே. எனக்கும் மனதில் வந்தது அதுதான். நான் ஒரு நாளும் இவ்வரசாங்கத்தை நல்லாட்சி அரசாங்கம் என கூறியதில்லை. ஆனால் மக்கள் மத்தியில் நாங்கள் இதை நல்லாட்சி அரசாங்கம் எனக் கூறுவதாக ஒரு பிரம்மை ஏற்படுத்தப் பட்டுள்ளது. நான் இவ்வரசாங்கத்தை நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லி இருக்கின்றேனா என எங்கேயும் போய் தேடிப்பாருங்கள்.

2015ம் ஆண்டு தேர்தலின் முன் நானும் தலைவர் சேனாதிராஜாவும் பல்வேறு இடங்களில் நடாத்திய பல்வேறு மக்கள் சந்திப்புகளில் ஒன்றான அம்பாறை கனகர் கிராமத்தில் நடாத்திய சிறிய சந்திப்பில், ஓர் சிறு பையன் எழுந்து கூறினான், “ஐயா, மஹிந்தவும் எங்களுக்கு எதிரி, மைத்ரியும் எங்களுக்கு எதிரி. ஆனால் எங்களுக்கு அவசரமாக ஒரு எதிரிமாற்றம் தேவையாக இருக்குதைய்யா” என்று. இதைத்தான் நாங்களும் மேடை மேடையாக கூறி வந்தோம். அதை எந்த பத்திரிகையும் போடவில்லை போல. ஏன் அந்த எதிரி மாற்றம் தேவை என நான் இன்றைக்கு கேட்டாலும் நியாயப் படுத்துவேன்.

தேர்தலுக்கு முன் கனடா பத்திரிகை ஒன்று என்னிடம் கேட்டபோது நான் கூறியது, “வீடு பற்றி எரிகிறது, வீட்டுக்குள் இருப்பவர்கள் எழும்பி ஓடவேண்டும் என்று கேட்கிறார்கள். அதுவே இந்த தேர்தல் - அதாவது எரியும் வீட்டிற்குள்ளிருந்து வெளியே ஓடுவது. ஆனால் ஓட வேண்டாம், அதற்குள்ளேயே இருந்து சாவுங்கள் என்பவர்களே அதை பகிஷ்கரிக்க சொல்லுபவர்கள்” எனச் சொன்னேன். எரியட்டும் எரிந்து சா. அவ்வாறு செத்தால் இன அழிப்புக்கு எமக்கு கூடுதலான ஆதாரம் கிடைக்கும் எனச் சொல்பவர்களே தேர்தலை பகிஷ்கரிக்க சொல்லுபவர்கள். அதை கனடா ஊடகங்களில் போட்டிருந்தாலும் இங்கு யாரும் போட்டதாக தெரிய வில்லை.

இந்த அரசாங்கத்தை நாங்கள் கொண்டுவந்தோம் என்பது பற்றிய விமர்சனங்களை ஏற்றுக்கொள் கின்றோம். ஏனெனில் இவ் அரசாங்கம் சொன்ன சொல்லக் காப்பாற்றவில்லை. அதை நாமும் பாராளுமன்றத்திலும் எல்லா இடத்திலும் அவர்களிடத்தில் சொல்லி வருகின்றோம். ஆனால் 2005 ம் ஆண்டு மகிந்த ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டுவந்தது யார் என எந்த பத்திரிகையாவது கேட்டுள்ளதா? கேட்க துணிவிருக்கின்றதா? ஆனால், 2015ம் ஆண்டு மகிந்த ராஜபக்சவை வீட்டுக்கு

அனுப்பியதா தவறு? இல்லாததை வாய்க்குள் திணித்து, சொன்னதை சொல்லாமல் விட்டுகொண்டிருக்காமல் உண்மையை ஒழுங்காக வெளி கொண்டுவந்தால், சிறப்பு!

"உண்மை தான் உங்களை விடுவிக்கும்" என்பது கிறிஸ்தவ வேத வாக்கியமாகும். அது தான் சுதந்திரம். உண்மையை எழுதுவது தான் ஊடக சுதந்திரம். உண்மையை சொன்னாலாவது எழுத வேண்டும். செல் நெறி என்பது சொல்லுவதை திரிபுபடுத்தாமல் எழுதுவதே.இது அடிப்படையான விடயம்.

ஈ.பி.டீ.பி. யிடம் மண்டியிட்டு விட்டது கூட்டமைப்பு - ஒருநாள் ஒரு பத்திரிகையின் தலையங்கம் இது. அதிலிருந்து கிளம்பியது தான் தலைவர் சொன்ன ஆதங்கம்.நாங்கள் கூட்டாக ஆட்சி அமைத்துள்ளோம் என்பதற்கு ஒரு சபையையாவது காட்டுங்கள் பார்ப்போம். அவர்கள் எங்களை கவிழ்த்ததை நான் மூன்று நாலு சபைகளில் காட்டுவேன். நான் தேர்தலுக்கு அடுத்த நாளே சொல்லியிருந்தேன், இத்தேர்தல் முறையில் நிர்வாகத்தை அமைக்கும் முறையிலுள்ள சிரமங்கள் காரணமாகவும், இவை மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய சபைகள் என்பதன் காரணமாகவும், ஓர் சபையில் எவருக்கு கூடுதலான ஆசனங்கள் உள்ளதோ அக்கட்சி அங்கு நிர்வாகத்தையமைக்க ஏனைய காட்சிகள் இடங்கொடுக்க வேண்டும் என்று. இதற்கு பல பொது நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஆதரவான அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். நடுநிலையாளர்களும் மற்ற கட்சிகளோடு போய் பேசினார்கள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லையே. வேலணையில் எமக்கு கூடுதலான ஆசனங்கள் இருந்தும் மஹிந்த ராஜபக்ச தரப்போடு சேர்ந்து ஈ.பி.டீ.பி அதைத் தட்டிப் பறித்தது. அதைவிட மோசமான



செயலொன்றையும் செய்ய பார்த்தனர், கரவெட்டியில் நமக்கு கூடுதல் ஆசனங்கள் இருந்த நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்தர கட்சியோடு இணைந்து அச்சபையை தாங்கள் எடுப்பதற்கல்ல, எடுத்து ஸ்ரீ லங்கா சுதந்தர கட்சியிடம் கொடுக்க முயன்றார்கள். நல்ல காலம் அது சரிவரவில்லை. யாழ்ப்பாண சபையிலும் அதற்காக போட்டியிட்டனர். ஆனால் முதலாவது பத்திரிகை ஈ.பி.டீ.பியிடம் மண்டியிட்டு விட்டது கூட்டமைப்பு என்று கூறிவிட்டதால் நாம் திரும்ப திரும்ப இவ்வுண்மைகளை சொன்னாலும் அவை காதிலேறுவதில்லை.

கூட்டமைப்புக்கு பின்னடைவு என்பதை நாங்களுமே சொல்கின்றோம், அதை நாங்கள் ஆராய வேண்டும். ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வந்த கட்டுரையையே ஒரு தமிழ் பத்திரிகை தமிழ்ப்படுத்தி போட்டிருந்தனர் ஒழிய வேறு எவரும் ஆராயவில்லை. எங்களிடமிருந்து வெளியே சென்ற வாக்குகள் எங்கு சென்றுள்ளது என்பது ஆராய வேண்டிய முக்கிய கேள்வி. ஆராய்ந்தால் மூன்றில் ஒரு பகுதி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிடம் போயிருக்கின்றது. மிகுதி மூன்றில்

இரண்டு எங்கே? ஈ.பி.டீ.பி யிடம் போயுள்ளது. இவ் ஒன்றரை வருட கால இடைவேளையில் ஈ.பி.டீ.பி யின் வாக்கு வாங்கி இரட்டித்துள்ளது. ஈ.பி.டீ.பி யிலிருந்து விலகி கிளிநொச்சியில் 40 சதவீத வாக்குகளைப் பெற்ற சந்திரகுமாரின் வாக்குகளையும் சேர்த்தால், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை விட ஈ.பி.டீ.பி கூடுதல் வாக்குகளை பெற்றுள்ளது.மிகுதியான வாக்குகள் தேசியக்கட்சிகளான ஐக்கியத் தேசியக் கட்சிக்கும், ஸ்ரீ லங்கா சுதந்தர கட்சிக்கும் மேலும் சில தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் சென்றுள்ளது. இதை ஏன் ஆராய்ந்து தமிழ் மக்களின் மனத்திலுள்ளதை அறிய யாரும் முன்வரவில்லை? சில பத்திரிகைகள் ஆராய்ந்துள்ளன எனும் நல்ல விடயத்தையும் கூறிக்கொள் கின்றேன்.

பெரும்பான்மையான எண்ணக் கருவை மக்களிடத்தில் ஏற்படுத்துவது அதிரடி தலையங்கங்களாகும். தலைப்பிற்கும் உள்ளடக்கத்திற்கும் சில வேளைகளில் தொடர்பு கண்டுபிடிக்க முடியாதிருக்கும். வேறு ஒரு செய்தியின் தலையங்கத்தை தவறுதலாக இதற்கு போட்டுவிட்டனரோ எனவும் நான் நினைத்ததுண்டு. ஊடகங்களின் கொள்கை அதாவது அடிப்படை செல்நெறி என்னவாக இருக்க வேண்டுமென்றால் அது உண்மையை பேசுதல் தான். வேறொன்றுமே இல்லை.சில மிக அரிதான சந்தர்ப் பங்களில், நாட்டில் குழப்பம் ஏற்பட வாய்ப்பிருந்தால் உண்மையை சொல்லாமல் விட வேண்டிய தேவைப் பாடு இருக்கும் - அது மிக அரிதே.

இத்தனை பத்திரிகையாளர்களின் மரணத்தை குறித்து இதுவரையில் ஒரு விசாரணை கூட ஆரம்பிக்கவில்லை. கடந்த 28ம் திகதி மட்டக்களப்பில் ஒரு பேரணியொன்று நடத்தப்பட்டு சிவராமின் கொலைக்கான விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்கள். நாங்கள் சிவராம் மற்றும் ஏனையோருக் கான நீதி வேண்டும் என்று நேற்று மே தினத்தன்றும் ஏனைய பொழுதிலும் சொல்லிவருகின்றோம். சிலருக்கு இதில் ஒரிருவரின் கொலைகளை விசாரிப் பதற்கு விருப்பமில்லை. இதைச் செய்தவர்கள் இப்போது எங்களோடு தானே உள்ளனர் என்ற ஆதங்கமும் உண்டு. எங்களோடு இருந்தாலென்ன எழுக தமிழில் இருந்தாலென்ன குற்றவாளி கண்டு பிடிக்கப்படத்தான் வேண்டும். உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதில் ஊடகங்கள் அழுத்தத்தைச் செலுத்த வேண்டும். உதயன் வருடாந்தம் இந்நிகழ்வை நடாத்துவது பாராட்டுக்குரிய விடயம் ஏனெனில் உண்மையின் அடிப்படையிலான நீதி கிடைக்கும் வரை இந்நினைவு மாறாமல் இருக்க வேண்டும்.

லசந்த விக்ரமதுங்கவினுடைய மரணத்தின் பின் 9 வருடங்களாகியும் இன்னமும் இழுபடுகின்றது. C.I.D நீதிமன்றிற்கு கொடுத்த அறிக்கைகளை வாசித்துப்பார்த்தால் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் இரண்டு மூன்று தடவை கைது செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்பது தெரியும். யாருக்கு கீழ் இது நடந்ததென்பது எழுத்தில் போடப்பட்டுள்ளது.

கீத் நோயர் உடைய தாக்குதல் யாருடைய உத்தரவின் பேரில் நிகழ்ந்ததென்பதும் C.I.D நீதிமன்றிற்கு சொல்லியிருக்கின்றது எனினும் அதுவும் இன்னமும் நகரவில்லை. லசந்த விக்ரமதுங்க கொலைசெய்யப்பட முன்னர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் சண்டே லீடர் பத்திரிகைக்கு எதிராக 2 வழக்குகள் தாக்கல் செய்திருந்தார். ஒன்றிலே, இனிமேல்



என்னைப்பற்றி அவதூறாக பிரசுரிக்க கூடாது என இடைக்கால உத்தரவு கூடப் பெற்றிருந்தார். லசந்த படுகொலை செய்யப் பட்டவுடனே அப்பத்திரிகைக்காக ஆஜரான சட்டத்தர ணிகள் பயந்து விலகி விட்டதால் வேறு சட்டத்தரணிகளிடத்தில் கொடுக்கப் பட்டது. முதல் நாள் நீதிமன்றில் லசந்தவின் இறுதி ஆசிரியர் தலையங்கம் வெளிவந்ததன் பின் கோத்தபாய ராஜபக்சவினுடைய சட்டத்தரணிகள் பெரிய சத்தமிட்டு இவர்கள் இடைக்கால தடை உத்தரவை மீறி இவ்வாறு பிரசுரித்துளார்கள் என கூறியவுடனே அந்த சட்டத்தரணிகளும் அடுத்தநாள் வரமறுத்துவிட்டதன் விளைவாக என்னிடத்தில் அவர்கள் வர, நான் தான் அதை பொறுப்பெடுத்து நடத்தினேன். முதல் நாள் நான் அவ்வழக்கில் ஆஜராகிவிட்டு வீடு திரும்பும் போது பாதுகாப்பு அமைச்சினுடைய உத்தியோக இணையதளத்தில் எனது படத்தையும் என்னோடு ஆஜரான இளம் சட்டத்தரணிகளின் படத்தையும் போட்டு கறுப்புக் கோட் போட்ட துரோகிகள் (Traitors in black coat) என ஒரு கட்டுரை வந்தது.அது இருவாரகாலமாக அதிலிருந்து பின் சட்டத்தரணிகள் சங்கத்தின் முறைப்பாட்டை தொடர்ந்து நீக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணமாக அடுத்த நாள் நான் ஆஜரான போது என்னோடு சேர்ந்து 33 சட்டத்தரணிகளும் ஆஜரானார்கள். அந்த வழக்கிலே கோத்தபாய ராஜபக்சவை தலா 3 மணித்தியாலங்கள் படி இரு தடவைகள் நான் குறுக்கு விசாரணை செய்தேன். அதை எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்கவில்லை.. இன்று வரை பிரசுரிக்கவில்லை! ஏனென்றால் டி.ஐ.ஜி அனுர சேனநாயக்க நீதிமன்ற வாசலில் நின்று ஒரு ஊடகவியலாளரையும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. தப்பித் தவறி வந்தோரையும் வெளியே அனுப்பிவிட்டனர். உத்தியோக பூர்வ நீதிமன்ற நடவடிக்கை (Proceedings) வெளிவந்த பின்பு கூட எந்த பத்திரிகையும் அதை பிரசுரிக்கவில்லை.

உதயன் பத்திரிகைக்கு எதிராக கூட 8 மானநஷ்ட வழக்குகள், முன்னாள் இராணுவ தளபதி அவர் இவர் என பலர்-

***டி.ஐ.ஜி அனுர சேனநாயக்க நீதிமன்ற வாசலில் நின்று ஒரு ஊடகவியலாளரையும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.***

தாடிவைத்த வேட்டிக்காரனும் கூட போட்டுள்ளனர். அவரையும் நான் பல தடவைகளில், ஏறத்தாழ 7 நாட்கள் குறுக்கு விசாரணை செய்துள்ளேன். அவர் இந்தியாவில் செய்ததாக சொல்லப்பட்ட விடயங்களுக்கு சரவணபவன் இந்திய நீதிமன்றில் திரட்டி வந்த பதிவுகளையெல்லாம் அவரிடம் காட்டி சூலமேட்டுச் சம்பவம் - தேடப்படும் குற்றவாளி என்பதையெல்லாம் காட்டி குறுக்கு விசாரணை........

(தொடரும்.....)

# கோட்டை இல்லாத ராஜன்

சின்னனாக ஒரு சிவப்பு தெரிந்தால் அதப்போல் ஒரு சந்தோசம் இல்லை. அப்பொழுது CTB என்றால் என்னவென்று தெரியாது. ஒரு சிவப்பு நிற பஸ் தான் வரும். இந்த பஸ்சை பார்ப்பது என்றால் வத்திராயன் தெற்கு ஊடாக ஆழியவளைக்கு பயணம் செய்யும் பஸ்சை தான் பார்க்க முடியும். இப்போது வீட்டு வாசல் அருகிலே நின்று பார்ப்பது போல பார்க்கமுடியாது. வத்திராயனி லுள்ள கரையோர வீதி அருகே மக்கள் கூட்டம் கூட்டமாக இருந்தாலும் பேருந்து பாதை என்பது 2km இற்கு அப் பால்தான் இருந் தது. நாங் கள் கூடுதலாக தாளையடிக்குத் தான் பஸ் ற்காக நடந்து போவம். வத்திராயனில் இருந்து தாளை யடி 5km இற்கு மேலாக இருந் தாலும் 5 நிமிடத்திற்குள் கால்நடையாக போயிடுவம். பஸ்ஸில் பயணம் செய்வது என்றால் அப்படியொரு சந்தோசம். எனக்கு மட்டுமல்ல எங்கள் ஊரவர்களுக்கும் பஸ்ஸில் பயணம் செய்வது பிளேனில் பயணம் செய்வது போல. அந்த நேரங்களில் தாளையடியில் தவராசா சலூன் ஒன்று வைத்திருந்தவர். எல்லாத்தகவல் களையும் அவருடைய கடைக்கு போனால் அறிந்து கொள்ளலாம். ஒரு பிறந்தநாள் செலவிற்கு கறிக்காக செலவழித்த உப்பு ஒரு மூடை தேவைப்பட்டதாக தாராசா கூறிய கதை எனக்கு இப்பவும் நினைவிருக்கிறது. அக்கா கடை வடையையும் மறக்க முடியாது. பஸ்ஸிற்கு வாறவர்கள் எல்லாம் அக்கா கடைக்கு போய் வடையையும் சாப்பிட்டு விட்டு அக்காவுடனும் அன்பாக கதைத்து விட்டே பயணத்தை ஆரம்பிப்பார்கள். இப்பகுதி மக்கள் மட்டுமல்ல பஸ்ஸின் ஓட்டுநர்களும் நடத்துநர்களும் நாங்கள் பஸ்ஸிற்குள் வியர்க்க வியர்க்க பயணம் போவதற்காக காவல் இருந்தாலும் அவர்கள் அக்கா கடையை விட்டு வரமாட்டார்கள். அப்படியொரு.....



யாழின் ஆரம்பப் பகுதி என்றும் முடிவுப்பகுதி என்று குறிப்பிடும் பகுதிதான் நல்ல தண்ணீர் தொடுவாய். கடலில் இருந்து 50m தூரம் கூட இருக்காது இந்த பகுதி. இதில் நல்ல சுத்தமான குடிநீர் எந்த காலமும் இருக்கும். இப்படியான ஒரு இடம் தான் யாழ்மாவட்டத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் பிரிக்கின்ற ஒரு இடம். அத்துடன் பேய்ப்பாரபுட்டி எங்கள் யாழ் மாவட்டத்திற்குரியது. மாத்தளன் பொக்கனை மக்களும் கண்டாவளையில் உள்ளவர்கள் சிலரும் எங்களுடைய மக்களும் கூடுதலாக சுண்டிக்குளத்தில தான் தொழிலுக்காக வாழ்ந்தார்கள்

அந்த காலம். அந்த நேரம் வேறு நாட்டுப்பறவைகள் எல்லாம் வருகிறபடியால் வெள்ளைக்காரர்கள் இலங்கையை கைப்பற்றிய காலத்திலேயே இது பறவைகள் சரணாலயம் என்று பெயரிடப்பட்டதாக கூறப்படுகிறது. காடுகள் இல்லாத வெட்டையான இடத்தில மானாவாரி பயிர்கள் செய்து அறுவடை செய்தார்கள். அங்கே ஒரு கிராமசேவையாளர் பிரிவு இருந்தது. அங்கு ஒரு போஸ்ரோவும் (தபாற் கந்தோர்) இருந்தது. வண்ணாங்குளம் சுண்டிக்குளம் இவ்விடங்களுக்கும் வேறு வேறு விதானைமார்கள் (கிராம சேவையாளர்) இருந்தார்கள். கோடை காலத்தில் தென்னிலங்கையில் உள்ளவர்கள் இங்கு கடற்றொழில் செய்தார்கள். இங்கே இருந்தவர்கள் கோடை காலத்தில் சுண்டிக்குள காட்டு வழியாக பிரதான வீதிக்கு போவார்கள். அது தான் இப்போது இருக்கின்ற சுண்டிக்குள சந்தி. இங்குள்ள வருமானங்களை அந்த பாதை ஊடாகத்தான் வியாபாரத்திற்கு கொண்டு செல்லுவார்கள். இதற்கு வாகனம் அதிகமாக மாட்டுவண்டிகளை பயன் படுத்தினார்கள். பின்பு லாண்ட்ஓவர் என்ற வாகனத்தை சிங்கள வியாபாரிகள் பயன்படுத்தினார்கள்.



இங்கே இறால் பிடிப்பது பிரதான தொழிலாக இருந்தது. தை தொடக்கம் மாசி பங்குனி வரை கூடுதலாக இது காணப்படுவதால் இதற்காகவே சில பேர் வந்து குடியிருப்பார்கள். பிறகு பிறகு இந்த இடத்தில உள்ள சனம் குறைந்ததற்கு காரணம் போக்குவரத்து செய்வதெல்லாம் தூரம் என்பதால். அதைவிட முக்கியமான சம்பவம் ஒன்று நடந்தது. அங்கு பிரபலமான சித்துள்ள சாமி ஒருவர் வந்திருந்தார். தொழில்கள் இல்லாத ஆக்களுக்கு மீன் பிடியை கூட்டுவதற்கு மந்திர மாந்திரீகம் எல்லாம் செய்து கொடுத்திருக்கிறார். இவர் சித்துள்ள மனுசன் மாந்தீரிகத்தில



கெட்டிக்காரர். கரவலைகளுக்கு வாடை அரைச்சு கொடுக்கிறவர். வாடை என்பது மீனை வசியும் செய்யும் ஒரு மாந்திரீகம். இந்த மருந்தை தெளிச்சுக்கொண்டு கரவலை தொழிலை செய்தா எக்கச் சக்கமான மீன்கள் எல்லாம் படும். காட்டுப்பிரதேசங்களில் தான் சாமி ஆக்கள் தியானம் செய்யிறது. இப்படியானதுகள செய்து கொண்டு இருக்கேக்க தான் அங்க ஒருவர் இறந்திட்டார். அவர் பாம்பு கடிச்சுதான் இறந்தவர். ஆனா உண்மையில அவர் சாகவில்லை. பாம்பு கடிச்சா பிறகு அவருக்கு உயிர் இருந்தது. ஆனா அடக்கத்தில் (மயக்கத்தில்) இருந்தவர். இப்ப நாங்கள் இத கோமா நிலை என்று சொல்லுறது. அத தெரியாமல் தான் அப்பத்தைய மக்கள் அவர் இறந்திட்டார் என்று நினைத்து பாடையில் வைத்து சுடலைக்கு கொண்டு போனவினம். போற வழியில இந்த சாமியை சந்திக்கிறார்கள். சாமியார் அதை மறிச்சுப்பார்த்து தூதன்குறி மூலம் அவர்

சாகவில்லை என்பதை அறிந்து அந்த பாடையை இறக்க சொல்லி கேட்டவர். இவர் வைத்தியம் செய்வதற்கு பாடையை தூக்கி வந்த ஒருவரும் சம்மதிக்கவில்லை. சாமியார் இவர்களுக்கு பின்னால சுடலை வரைக்கும் போய் அங்க அவர்கள் பாடையை இறக்கியவுடன் இவருக்கு வைத்தியம் செய்தால் உயிர் பிழைப்பார் என்று சொல்லி இவர்களின் சம்மதத்துடன் வெள்ளைத்துணிகளை சுத்தவர கட்டி அதற்கு உள்ளுக்குள் மறைவாக இருந்து கொண்டு மந்திரம் மூலம் செபம் சொல்லி பாம்பை கூப்பிட்டார். அந்த மனுசனுக்கு கடித்த விசத்தை பாம்பின் மூலமே எடுத்தார். வெத்திலை வேப்பிலையால மந்திரித்தார். இதற்கு ஒரு சட்டியில பால் கொண்டு போய் இந்த பாம்பின் விசத்தை பாலுக்குள்ள இறக்கி மக்கள் எல்லோருக்கும் காட்டினார். இந்த நேரம் இறந்தவர் தெளிவடைந்தார். பிறகு இவரை வேப்பிலையால் மந்திரிச்சு மயக்கத்தை தெளியவச்சு நடத்தி கூட்டிக்கொண்டு போனவினம். இதற்கு பிறகு அங்கு உள்ள சில மக்கள் எரிச்சல் பிடித்து இவரிட்ட இருக்கிற சக்தி எல்லாத்தையும் அபகரிக்க வேண்டும் என்று கூறி இவரின் மந்திரப்புத்தகங்கள் ஏடுகள் எல்லாவற்றையும் பெற வேண்டும் என்று சொல்லி திட்டம் போட்டினம் இந்த சாமியாரை சன்னியாசி என்றும் சொல்லுறது. அப்பையா என்று சொல்லும் குடும்பத்தினர் தான் அவருக்கு தெரியாமல் இந்த புத்தகங்கள் ஏடுகள் மருந்துக்கட்டுகள் இந்த முறைகள் எல்லாத்தையும் எடுத்தார்கள். அதற்கு பிறகு அவர் கோபமடைந்து இந்த ஊரை விட்டு வெளியேறினார். அந்த நேரம் போட்ட சாபம் தான் இந்த ஊரில உள்ள மக்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து இந்த ஊரை விட்டு வெளியேற காரணம். "என சோதிட வைத்தியர் சிறி கந்தசாமி கூறினார்.

கரவலை சம்மாட்டிமார்களும் பல வருடங்களாக தொழில்களை நடத்தி வந்த இடங்களில் ஒன்று வத்திராயன் கிராமம். எங்களுக்கு தெரிந்த காலங்களில் மருதங்கேணியின் கடற்கரை எல்லை தொடக்கம் உடுத்துறை கடற்கரை எல்லைக்கும் இடையில் பத்திற்கு மேற்பட்ட கரவலைகள் இருந்தன. இந்த சம்மாட்டிமார்கள் எல்லாம் அந்த காலங்களில் உள்ள உடையார்கள் போலவே வசதியாகவும் பெரியவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுடைய வீட்டில் எந்த நாட்களும் கலகலப்பாக தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டே இருப்பார்கள். இங்கு உள்ளவர்கள் அவசர தேவை கருதி பணங்களை பெறுவதற்கு பருத்தித்துறை அல்லது பளையில் உள்ள வங்கிகளுக்கு தான் வரவேண்டும். எமது மக்களுக்கு



சேமிப்பு பழக்கம் மிகவும் குறைவு. இதனால் வங்கியில் பணம் இல்லாமல் எப்படி கொடுக்கல் வாங்கல்களை செய்ய முடியும். எமது ஊரிலும் சரி அயல் ஊர்களிலும் சரி சம்மாட்டிமார்களே வங்கிகளாக இருந்தனர். சேமிப்பு கணக்குகள் நடைமுறைகணக்குகள் இல்லாவிட்டாலும் கூட ஒரு மரண நிகழ்விற்கோ அல்லது ஒரு சுப நிகழ்வுகளுக்கோ அவசரத்திற்கான பணத் தேவைகளை இப்பகுதி மக்களுக்கு உதவி செய்து மீளப் பெறுவார்கள்.


கரைவலைகளை பற்றி கூறுவதற்கு இந்த பக்கம் மட்டும் போதாது என்று நினைக்கின்றேன். ஏனெனில் அது ஒரு நீண்ட தொழில். வடமராட்சி கிழக்கில் உள்ள மக்கள் மட்டுமல்லாமல் இலங்கைத்தீவிலேயே ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்த கரைவலைத் தொழிலை நம்பியே வாழ்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அந்த வகையில் இது ஒரு சாதாரண தொழிலாக மதிப்பிட முடியாமல் இன்றும் வெற்றிநடைபோடுகிறது. இதில் சில கட்டங்களை காலங்கடந்தும் கலைத்து விடமுடியாமல் மனதில் நிறுத்திக் கொண்டே செல்லுகின்றது. செல்லமாணிக்கம் சம்மாட்டியின் செந்தமிழ்களும் "கோத்தயின்ர......" என்று தனது மகனைக்கூட பேசுவார். சுந்தரம் சம்மாட்டியின் முறுக்கிய மீசையும் முறாய்ப்பு பார்வையும் கடுமையான வார்த்தைகள் இப்படி பல ஏராளம். வாடிச் சொதியும் சோறும் என்றால் நாக்கூறுகிறது. இது சோறு வைத்து பங்கு வலை செய்பவர்களே ஒவ்வொரு நாளும் காலையில் செய்வார்கள். சோறும் ஒரு கறியும் தான். இந்த கறிக்கு காலையிலே

***செல்லமாணிக்கம் சம்மாட்டியின் செந்தமிழ்களும் "கோத்தயின்ர......" என்று தனது மகனைக்கூட பேசுவார். சுந்தரம் சம்மாட்டியின் முறுக்கிய மீசையும் முறாய்ப்பு பார்வையும் கடுமையான வார்த்தைகள்***

கிடைக்கும் மீன்களை துடிக்க துடிக்க வெட்டி சமைப்பார்கள். இதன் சுவை இப்பொழுதுள்ள "பிறைட்றைஸ்" இல் கூட இருக்காது.

பெண்கள் இத்தொழிலில் ஈடுபடுவது சில இடங்களில் மட்டுமே காணப்படும். குறிப்பாக தென்னிலங்கையில் இருந்து வரும் இந்த சோறு வைத்து பங்கு வலையில் வாடிகள் அமைத்து தங்கியிருப்பார்கள்.

எமது ஊரில் சுந்தரம் சம்மாட்டியின் தென்னிலங்கையில் இருந்து வந்து ஆண்கள் பெண்களை கொண்டு வந்து தொழில் செய்யுமளவிற்கு பெரிய சம்மாட்டி யாகவே வாழ்ந்தது எங்களுடைய காலங்களில் கண்டிருக்கின்றோம். இப் பெண்கள் கடலிற்குள் இறங்கி படகில் செல்லா விட்டாலும் கூட கரையிலேயே



தங்கியிருந்து வலை இழுப்பது, கயிறு வளைப்பது, மீன் வெட்டுவது, கருவாடு பதனிடுவது, சமையல் செய்வது என மண்டாடி சொல்லும் வேலைகளை திறம்பட செய்து முடிப்பார்கள். அதுமட்டுமல்லாமல் சம்மாட்டிமார் களுக்கும் சந்தோசமாக எல்லா வேலைகளுக்கும் தங்களுடைய தொழில் ரீதியிலான ஒத்துழைப்புகளை வழங்கி தேவை ஏற்பட்டால் சில விட்டுக்கொடுப்புக்களும் தங்களை ஆளாக்குகின்றனர்.

(ராஜன் வருவான்....)

ஏ.சசி

# பேரினவாதத்தின் ராஜதந்திரி

நான் கேட்கிறேன் உங்களிடம், உலகில் மிகப்பெரிய சுயநலச்சொல் என்னவாக இருக்கும்? நான், சொல்வது சரிதானே? உலகில் அனைத்தும் நான் என்ற சொல்லினாலேயே சூழப் பட்டுள்ளது.

உதாரணமாக : ஐ போன், ஐ பொட், ஐ பாட்

பின்னர் மனிதன் சொல்கிறான் இதற்கு மனிதன் தானே அனைத்திற்கும் பணம் செலுத்துகிறான். நாம் என்ன செய்வது இதற்கு? ஏனெனில் உலகில் அனைத்தும் நான் என்ற சொல்லின் உச்சகட்ட சுயநல வார்த்தையினாலே சூழப்பட்டுள்ளது.

இவ்விடயத்தின் மூலம், நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட உலகம் முழுவதின் பார்வையும் தன் மேற் பதித்த வளங்கள் நிறைந்த இயற்கை தாண்டவம் ஆகும். எம் இலங்கைத்தீவின் தற்கால நிலைக்கும் இந்த "நான்" என்ற அதிகாரத்தனமான மேதாவித்தனமான எவ் அளவு கோலினாலும் அளக்கவே முடியாத சுயநல வார்த்தையே காரணமாக அமையலாம் என்ற சில பதிவுகளில் இருந்து தான் பார்த்து கற்றுக்கொண்டது உண்மை.

வெறும் ஒரு றாத்தல் பாணிற்கு அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து வரிசையில் நின்று எதுவுமே கிடையாத காலங்களாக எம் வரலாறு 1977 ஆம் ஆண்டு காலங்களின் பதிவுகளாக அமைந்துள்ளது. எமக்கு தெரிந்த விடயங்களே? பின்னர் 1972 களில் ஆரம்பப்புள்ளிகளினை அமைத்துக் கொண்டாலும் 1983 களில் ஒரு சுயாதீன சுயம்பாகவே வளர்த்து விருட்சமடைந் தது. பின்னர் காலங்களின் சுழற்சியில் பல இன்னல்கள் பல துரோகங்கள் பல போட்டி பொறாமைகள் ஓரினப்படு கொலை மற்றும் விலை போதல் போன்ற சுயநலக்கோட்பாடுகள் ஆன "நான்" எனக்கு என்னுடைய என்ற பார்வையில் பல இழப்புகள் எம் தமிழ், முஸ்லீம், மலையகத்தமிழர்கள் என்பவர்களிடம் இன்றுவரை தீர்க்க முடியாத தீர்வு களாகவே இருந்து வருகின்றது. ஏன் சிங்கள மக்களிடமும் இருந்துள்ளது.

ஒரு தமிழனை 20 நாடுகள் சேர்ந்து அழித்த காலங்களும் எம் வரலாற்றில் 2009 ஆம் ஆண்டுகளில் நடந்தது. இது யாவரும் அறிந்ததே. காலாற்படை, வான்படை. தற்கொலைப் படை, தரைப்படை, கடற்படை, என்று உலக வரலாற்றில் நினைத்தும் பார்க்க முடியாத வளர்ச்சியை அவர்கள் எட்டியதாலோ என்னமோ அவர்கள் தங்களை மிஞ்சிய பலத்தைக் கொண்டு நம்மையும் ஆட்சி செய்து விடுவார்களோ என்ற பயத்தினாலோ சங்கம் வளர்த்த ஆதித்தமிழனை ஒன்று கூடி அழித்தனர்.

***இவை அனைத்திற்கும் "என்னை" மிஞ்சிய ஒருத்தன் வந்து விடுவானோ என்ற பயம் "நான்" தான் இங்கு பெரியவன் என்ற ஆணவம். இதுவே காரணம். நீண்ட காலமாக தானும் தன்னுடைய வேலையுமாக இருந்து வாழ்ந்த ஒருவர் திடீரென தான்தான் தமிழ் மக்களின் தலைவனாக காட்ட முனைவது வேடிக்கையான செயல்.***

இவை அனைத்திற்கும் "என்னை" மிஞ்சிய ஒருத்தன் வந்து விடுவானோ என்ற பயம் "நான்" தான் இங்கு பெரியவன் என்ற ஆணவம். இதுவே காரணம். நீண்ட காலமாக தானும் தன்னுடைய வேலையுமாக இருந்து வாழ்ந்த ஒருவர் திடீரென

தான்தான் தமிழ் மக்களின் தலைவனாக காட்ட முனைவது வேடிக்கையான செயல். கடுமையான இன துவேசங்களை அள்ளி வீசி சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ முடியாது தமிழர்களுக்கான தாயக பூமி வடக்கு கிழக்கு என இப்போது கூறும் இந்த வார்த்தைகள் தங்களுடைய பிள்ளைகள் திருமண மாகாணசபை காலங்களில் எம் மக்கள் கண்ட அனுபவமே.

பின்னர் தமிழன் நாம் எம் சுயநிர்ணயத்திற்காக எதைக் கொண்டு போராடுவது? நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களை முகவரிகளாகக்கொண்டு அரசியல் எனும் மாபெரும் ஆயுதத்தை



விடயங்களில் மட்டும் விதிவிலக்கா? அயல் நாடு ஒன்றின் உதவியுடன் சம்மந்தியின் அரசியல் இராஜதந்திரத்தினை வெற்றி கரமாக செய்து முடிப்பதற்கு தெரிந்தோ தெரியாமலோ எமது மக்களின் வோட்டுக்கள் காரணமாகிவிட்டது. மீண்டும் நான்கு யோசனைகள் அல்ல நாற்பது யோசனைகளுடன் தனி கட்சி அமைத்துக்கொண்டு நீங்கள் களம் இறங்கினாலும் யாவும் இன வாதத்தினை சிங்கள மக்களிடம் அள்ளி வீசி ஆட்சிக்கு வர துடிக்கும் முன்னைய அரசாங்கத்தின் ஏற்பாடுகளாகவே இருக்கும் என்பதில் சந்தேகங்களையே தோற்றுவிக்கின்றது.

நான் என்ற சுயநலம் நான் தான் என்ற கர்வம் எம்மை ஆட்டுவித்துக் கொண்டு இருந்ததை இந்த 4 வருட மிகச்சரியாக 2012 ஆம் ஆண்டு நிலைநாட்டி 2015 இல் மிகச்சரியாக படைபலம் அமைத்து சோரம் போகாது யாருக்கும் கீழ்ப்படியாது விலைபோகாது தன்னம்பிக்கை, தன்னிறைவு, தன்னாட்சி என்ற நோக்கத்துடனும் அறிவு, ஆளுமை என்ற மிகவும் கூர்மையான ஆயுதங்களையும் நாளுக்கு நாள் சாணை பிடித்து இன்று வரை "நான்" என்ற சுயநலம் இல்லாத மிகச்சரியான வழியில் நேர்த்தியான பாதையில் செல்லும் ஐம்பாதாயிரத்துக்கு மேலாக செல்லும் வாக்குகளை பெற்று தமிழ் மக்களின் பிரதிநிதியாக இன்று வரை கொள்கை மாறாது போராடும் புத்திஜீவிகளை நாம் ஆர்வப்படுத்தல் இன்றைய எம் தமிழர்களின் கட்டாய தேவையாக இருக்கும்.

அனோஜ்

# காத்திருப்பு



காதல் கொண்டு
காத்திருக்கிறேன்
என்று நீ என் கரம்
பிடிப்பாய் என்று
கனவிலும் உன்முகம்
தேடுகிறேன்
ஒருமுறையாவது உன்னை
காண்பேன் என்று
எதற்காக என்னை
தவிக்க வைக்கிறாய்
இந்த தவிப்புக்கள் எல்லாம்
எப்போது உன் அணைப்பில்
வந்து சேருமடா
என்னவனே.........

இந்து

உங்களுடைய விமர்சனங்கள், எண்ணங்கள், ஆக்கங்களை, எமக்கு அனுப்பி வைக்கவும்.


தபால் முகவரி :
விடியல்
இல. 24,
பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

# பொன்னியின் செல்வன்

சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்துக்குரிய இளவரசரும் வடதிசைச் சைன்யத்தின் மகாதண்ட நாயகருமான ஆதித்த கரிகாலர் இவ்விதம் சொல்லியிருந்தார். மேலும் வந்தியத்தேவன் நடந்துகொள் ளவேண்டிய விதங்களைப் பற்றியும் படித்துப் படித்துக் கூறியிருந்தார். இவையெல்லாம் நினைவுவரவே பழு வேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வல்லவரையன் அடக்கிக்கொண்டான். குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றான். என்ன தட்டி விட்டாலும் களைப்புற்றிருந்த அந்தக் குதிரை மெதுவாகவே சென்று இன்று இரவு கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கிவிட்டு நாளைக் காலையில் புறப்படும்பொது வேறு நல்ல குதிரை சம்பாதித்துக் கொண்டே கிளம்ப வேண்டும் என்று மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

**ஆழ்வார்க்கடியான் நம்பி**

ஏரிக்கரையிலிருந்து கீழிறங்கித் தென்திசை சென்ற பாதையில் குதிரையைச் செலுத்திய போது வந்தியத் தேவனுடைய உள்ளம் ஏரி அலைகளின் மீது நடனமாடிய படகைப் போல் ஆனந்தக் கூத்தாடியது. உள்ளத்தின் உள்ளே மறைந்து கிடந்த குதூகலம் பொங்கித் ததும்பியது. வாழ்க்கையில் வேறு யாரும் காணாத அதிசய அனுபவங்களைத் தான் அடையும் காலம் நெருங்கி விட்டதென்று அவனுடைய உள்ளுணர்ச்சி சொல்லியது. சோழ நாட்டை அணுகும் போதே இவ்வளவு ஆனந்தக் கோலாகலமாக இருக்கிறதே? கொள்ளிடத்தைத் தாண்டி விட்ட பின்னர் அச்சோழ நாட்டின் நீர்வளமும்



நிலவளமும் எப்படியிருக்கும், அந்நாட்டில் வாழும் மக்களும் மங்கையரும் எப்படியிருப்பார்கள்? எத்தனை நதிகள்? எத்தனை குளங்கள்? எத்தனை தெளிநீர் ஓடைகள்? கவிகளிலும் காவியங்களிலும் பாடப்பெற்ற பொன்னி நதியின் காட்சி எப்படியிருக்கும்? அதன் கலைகளிலே பூத்துக் குலுங்கும் புன்னை மரங்களும் கொன்னை மரங்களும் கடம்ப மரங்களும் எத்தகைய மனோகரமான காட்சியாயிருக்கும்? நீரோடைகளில் குவளைகளும் குமுதங்களும் கண்காட்டி அழைப்பதும் செந்தாமரைகள் முகமலர்ந்து வரவேற்பதும் எத்தகைய இனிய காட்சியாயிருக்கும்? காவேரியின் இரு கரைகளிலும் சிவபக்திச் செல்வர்களான சோழப் பரம்பரையினர் எடுப்பித்துள்ள அற்புத வேலைப் பாடமைந்த ஆலயங்கள் எவ்வளவு அழகாயிருக்கும்?

ஆகா! பழையாறை நகர்! சோழ மன்னர்களின் தலைநகர்!

பூம்புகாரையும் உறையூரையும் சிறிய குக்கிராமங்களாகச் செய்து விட்ட பழையறை! அந் நகரிலுள்ள மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் படை வீடுகளும் கடைவீதிகளும் சிவாலயக் கற்றளிகளும் திருமாலுக்குரிய விண்ணகரங்களும் எப்படியிருக்கும்? அந்த ஆலங்களில் இசை வல்லவர்கள் இனிய குரலில் தேவாரப் பாடல்களையும் திருவாய் மொழிப் பாசுரங்களையும் பாடக் கேட்டோர் பரவசமடைவார்கள் என்று வந்தியத்தேவன் கேள்வியுற்றிருந்தான். அவற்றையெல்லாம் கேட்கும் பேறு தனக்கு விரைவில் கிடைக்கப் போகிறது இது மட்டுந்தானா? சில நாளைக்க முன்பு வரையில் தான் கனவிலும் கருதாத சில பேறுகளும் கிட்டப்போகின்றன. வீரத்தில் வேலனையும் அழகில் மன்மதனையும் நிகர்த்த பராந்தக சுந்தர சோழ மகாராஜாவை நேருக்கு நேர் காணப்போகிறான். அவ்வளவுதானா? அவருடைய செல்வப் புதல்வி, ஒப்பியர்வில்லாத நாரீமணி, குந்தவைப் பிராட்டியையும் காணப்போகிறான்.

ஆனால் வழியில் தடை எதுவும் நேராமல் இருக்க வேண்டும் எந்தத் தடை நேர்ந்தால்தான் என்ன? கையிலே வேல் இருக்கிறது இடையில் தொங்கிய உறையிலே வாள் இருக்கிறது. மார்பிலே கவசம் இருக்கிறது. நெஞ்சிலே உரமிருக்கிறது. ஆனால் மகாதண்டநாயகர், இளவரசர் ஆதித்தர், ஒரு பெரிய முட்டுக்கட்டை போட்டிருக்கிறார். ஒப்புவித்த காரியத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு யாரிடமும் சண்டை பிடிக்கக் கூடாதென்று. அந்தக் கட்டளையை நிறைவேற்றுவது தான் மிகவும் கடினமாயிருந்தது. ஏதோ இவ்வளவு தூரமும் பிரயாணம் செய்தபோது நிறைவேற்றியாகிவிட்டது. இன்னும் இரண்டு நாளையப் பிரயாணம் தானே மிச்சமிருக்கிறது? அதுவரை பொறுமையுடன் இருந்தே தீர வேண்டும்.

ஆதவன் மறைவதற்குள் கடம்பூரை அடைய வேண்டும் என்ற கருத்துடன் சென்றுகொண்டிருந்த வந்தியத்தேவன் சிறிது நேரத்துக்கெல்லாம் வீர நாராயணபுர விண்ணகரக் கோயிலை நெருங்கினான்.

அன்று ஆடித் திருமஞ்சனத் திருவிழாவும் சேர்ந்திருந்த படியால் கோயிலைச் சுற்றியுள்ள மரத்தோப்புகளில் பெரும் ஜனக்கூட்டம் சேர்ந்திருந்தது.

பலாச் சுளைகளும் வாழைப் பழங்களும் கரும்புக் கழிகளும் பலவகைத் தின்பண்டங்களும் விற்பவர்கள் ஆங்காங்கே கடை வைத்திருந்தார்கள். பெண்கள் தலையில் சூடிக் கொள்ளும் மலர்களையும், தேவ பூஜைக்குரிய தாமரை மொட்டுக்கள் முதலியவற்றையும் சிலர் விற்றுக் கொண்டிருந்தார்கள். தேங்காய், இளநீர், அகில், சந்தனம், வெற்றிலை, வெல்லம், அவல், பொரி முதலியவற்றைச் சிலர் குப்பல் குப்பலாகப் போட்டுக் கொண்டிருந்தார்க்ள. ஆங்காங்கே வேடிக்கை விநோதங்கள் நடந்து கொண்டிருந்தன. ஜோசியர்கள், ரேகை சாஸ்திரத்தில் வல்லவர்கள், குறி சொல்லுகிறவர்கள், விஷக்கடிக்கு மந்திரிப்பவர்கள் இவர்களுக்கும் அங்கே குறையில்லை. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சென்ற வந்தியத்தேவன் ஓரிடத்தில் ஒரு பெருங்கூட்டம் நின்று கொண்டிருப்பதையும் அந்தக் கூட்டத்துக்குள்ளேயிருந்து யாரோ சிலர் உரத்த குரலில் வாக்குவாதம் செய்யும் சத்தம் வருவதையும் கவனித்தான். என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதை அறிந்துகொள்ள அவனுக்கு ஆவல் பீறிக்கொண்டு எழுந்தது. அந்த ஆவலை அடக்கிக் கொள்ள அவனால் முடியவில்லை. கூட்டத்துக்கு வெளியில் சாலை ஓரமாகக் குதிரையை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினான். குதிரையை

அங்கேயே நிற்கும்படி தட்டிக் கொடுத்துச் சமிக்ஞையால் சொல்லிவிட்டுக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு உள்ளே போனான்.

அங்கே விவாதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மூன்றே பேர்தான் என்பதைப் பார்க்க அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால் விவாதத்தில் ஈடுபட்டவர்கள் மூன்றே பேர்தான் என்றாலும், கூட்டத்திலிருந்தவர்கள் பலர் அவ்வப்போது அவரவர்களுக்கு உகந்த வாதக்காரரின் கட்சியை ஆதரித்துக் கோஷங்களைக் கிளப்பினார்கள். அதனாலேதான் அவ்வளவு சத்தம் எழுந்தது என்பதை வந்தியத்தேவன் தெரிந்துகொண்டான். பிறகு என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதைக் கவனித்தான்.

வாதமிட்ட மூவரில் ஒருவர் உடம்பெல்லாம் ஊர்த்வபுண்டரமாகச் சந்தனம் அணிந்து தலையில் முன் குடுமி வைத்திருந்த வைஷ்ணவ பக்த சிகாமணி. கையில் அவர் ஒரு குறுந்தடியும் வைத்திருந்தார். கட்டையாவும் குட்டையாயும் வைரம் பாய்ந்த திருமேனியுடன் விளங்கினார். இன்னொருவர் தமது மேனியெல்லாம் பட்டை பட்டையாய்த் திருநீறு அணிந்திருந்த சிவபக்தர். மூன்றாவது மனிதர் காவி வஸ்திரம் தரித்துத் தலையையும் முண்டனம் செய்து கொண்டிருந்தார். அவர் வைஷ்ணவரும் அல்ல, சைவரும் அல்ல, இரண்டையும் கடந்தவரான அத்வைத வேதாந்தி என்று தெரிய வந்தது.

சைவர் சொன்னார்: "ஓ, ஆழ்வார்க்கடியான் நம்பியே! இதற்கு விடை சொல்லும்! சிவபெருமானுடைய முடியைக் காண்பதற்குப் பிரம்மாவும், அடியைக் காண்பதற்குத் திருமாலும் முயன்றார்களா, இல்லையா? முடியும் அடியும் காணாமல் இருவரும் வந்து சிவபெருமானுடைய பாதங்களில் சரணாகதி அடைந்தார்களா, இல்லையா? அப்படியிருக்கச் சிவபெருமானைக் காட்டிலும் உங்கள் திருமால் எப்படிப்பெரிய தெய்வம் ஆவார்?"

இதைக்கேட்ட ஆழ்வார்க்கடியான் நம்பி தன் கைத் தடியை ஆட்டிக்கொண்டு, "சரிதான் காணும்! வீர சைவ பாததூளிபட்டரே! நிறுத்தும் உம் பேச்சை! இலங்கை அரசனாகிய தசகண்ட ராவணனுக்கு உம்முடைய சிவன் வரங்கள் கொடுத்தாரே? அந்த வரங்கள் எல்லாம் எங்கள் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானின் கோதண்டத்தின் முன்னால் தவிடு பொடியாகப் போகவில்லையா? அப்படியிருக்க, எங்கள் திருமாலைக் காட்டிலும் உங்கள் சிவன் எப்படிப் பெரிய தெய்வமாவார்? " என்று கேட்டான்.

இந்தச் சமயத்தில் காவி வஸ்திரம் அணிந்த அத்வைத சந்நியாசி தலையிட்டுக் கூறியதாவது: நீங்கள் இருவரும் எதற்காக வீணில் வாதம் இடுகிறீர்கள்? சிவன் பெரிய தெய்வமா, விஷ்ணு பெரிய தெய்மா என்று எத்தனை நேரம் நீங்கள் வாதித்தாலும் விவகாரம் தீராது. இந்தக் கேள்விக்கப் பதில் வேதாந்தம் சொல்கிறது. நீங்கள் கீழான பக்தி மார்க்கத்தில் இருக்கிற வரையில்தான் சிவன் - விஷ்ணு என்று சண்டையிடுவீர்கள். பக்திக்கு மேலே ஞானமார்க்கம் இருக்கிறது. ஞானத்துக்கு மேலே ஞாஸம் என்று இருக்கிறது. அந்த நிலையை அடைந்து விட்டால் சிவனும் இல்லை., விஷ்ணுவும் இல்லை. சர்வம் பிரம்ம மயம் ஜகத் ஸ்ரீசங்கர பகவத் பாதாச்சாரியார் பிரம்ம சூத்திர பாஷ்யத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்...."

இச்சமயம் ஆழ்வார்க்கடியான் நம்பி குறுக்கிட்டு, சரிதான் காணும், நிறுத்தும்! உம்முடைய சங்கராச்

சாரியார் அவ்வளவு உபநிஷதங்களுக் கும் பகவத்கீதைக்கும் பிரம்ம சூத்திரத் துக்கும் பாஷ்யம் எழுதி விட்டுக் கடைசியில் என்ன சொன்னார் தெரி யுமா?

"பஜ கோயிந்தம் பஜ கோயிந்தம்
பஜ கோயிந்தம் மூடமதே!"

என்ற மூன்று வாட்டி சொன்னார். உம்மைப் போன்ற மௌடீகர்களைப் பார்த்துத்தான் "மூடமதே!" என்று சங்கராச்சாரியார் சொன்னார்!" எனக்கூறியதும், அந்தக் கூட்டத்தில் "ஆஹா" காரமும், பரிகாசச் சிரிப்பும் கரகோஷமும் கலந்து எழுந்தன.

ஆனால் சந்நியாசி சும்மா இருக்கவில்லை. "அடே! முன்குடுமி நம்பி!" நான் "மூடமதி" என்று நீ சொன்னது சரிதான். ஏனென்றால், உன் கையில் வெறுந்தடியை வைத்துக் கொண்டிருக்கும் நீ வெறுந்தடியன் ஆகிறாய். உன்னைப் போன்ற வெறுந்தடியனோடு பேச வந்தது என்னுடைய மூடமதியினால் தானே?" என்றார்.

"ஓய் சுவாமிகளே! என் கையில் வைத்திருப்பது வெறுந்தடியல்ல. வேண்டிய சமயத்தில் உம்முடைய மொட்டை மண்டையை உடைக்கும் சக்தி உடையதுங்காணும்!" என்று கூறிக்கொண்டே ஆழ்வார்க்கடியான் கையிலிருந்த குறுந்தடியை ஓங்கினான். அதைப் பார்த்த அவன் கட்சியார் "ஓஹோ!" என்று ஆர்ப்பரித்தனர்.

அப்போது அத்வைத சுவாமிகள், அப்பனே! நிறுத்திக் கொள்! தடி உன்னுடைய கையிலேயே இருக்கட்டும். அப்படியே நீ உன் கைத்தடியால் என்னை அடித்தாலும் அதற்காக நான் கோபங்கொள்ள மாட்டேன். உன்னுடன் சண்டைக்கு வரவும் மாட்டேன். அடிப்பதும் பிரம்மம்: அடிபடுவதும் பிரம்மம், என்னை நீ அடித்தால் உன்னையே அடித்துக் கொள்கிற வனாவாய்!" என்றார்.

ஆழ்வார்க்கடியான் நம்பி, "இதோ எல்லோரும் பாருங்கள்! பிரம்மத்தைப் பரப்பிரம்மம் திருச்சாத்துச் சாத்தப் போகிறது. என்னை நானே தடிகொண்டு தாக்கப் போகிறேன்!" என்று தடியைச் சுழற்றிக்கொண்டு சுவாமிகளை நெருங் கினான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வல்லவரையனுக்கு ஒரு கணம் அந்த முன் குடுமி நம்பியின் கைத்தடியை வழி மறித்துப் பிடுங்கிக் கொண்டு அவனை அந்தத் தடியினால் நாலு திருச்சாத்துச் சாத்தலாமா என்று தோன்றியது.

ஆனால் திடீரென்று சுவாமி யாரைக் காணோம்! கூட்டத்தில் புகுந்து அவர் மறைந்து விட்டார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவ கோஷ்டியார் மேலும் ஆர்ப்பரித்தார்கள்.

ஆழ்வார்க்கடியான் வீரசைவ ருடைய பக்கமாகத் திரும்பி, "ஓய் பாத தூளி பட்டரே! நீர் என்ன சொல்லுகிறீர்? மேலும் வாதம் செய்ய விரும்புகிறீரா? அல்லது சுவாமியாரைப் போல் நீரும் ஓட்டம் எடுக்கிறீரா?" என்றான்.

"நானா? ஒருநாளும் நான் அந்த வாய் வேதாந்தியைப் போல் ஓட்டம் எடுக்க மாட்டேன். என்னையும் உம்முடைய கண்ணன் என்ற நினைத்தீரோ? கோபியர் வீட்டில் வெண்ணெய் திருடி உண்டு மத்தால் அடிபட்டவன்தானே உம்முடைய கண்ணன்!..." என்று பாததூளிபட்டர் சொல்வதற்குள், ஆழ்வார்க்கடியான் குறுக்கிட்டான். "ஏன் காணும்?

உம்முடைய பரமசிவன் பிட்டுக்கு மண் சுமந்து முதுகில் அடிபட்டதை மறந்து விட்டீரோ?" என்று கேட்டுக்கொண்டு கைத்தடியை வீசிக் கொண்டு வீர சைவர் அருகில் நெருங்கினான்.

ஆழ்வார்கக்கடியான் நல்ல குண்டாதி குண்டன். வீரசைவராகிய பாததூளி பட்டரோ சற்று மெலிந்த மனிதர்.

மேற்கூறிய இருவரையும் விவாதத்தில் உற்சாகப்படுத்தி வந்தவர்கள் தாங்களும் கைகலக்க ஆயத்தமாகி ஆரவாரம் செய்தார்கள்.

இந்த மூடச் சண்டையைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் வல்லவரையன் மனத்தில் உண்டாயிற்று.

அவன் நின்ற இடத்திலிருந்து சற்றும் முன்னால் வந்து, "எதற்காக ஐயா நீங்கள் சண்டை போடுகிறீர்கள்? வேறு வேலை ஒன்றும் உங்களுக்கு இல்லையா? சண்டைக்குத் தினவு எடுத்தால் ஈழநாட்டுக்குப் போவது தானே? அங்கே பெரும் போர் நடந்து கொண்டிருக்கிறதே?" என்றான்.

நம்பி சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்து, "இவன் யாரடா நியாயம் சொல்ல வந்தவன்!" என்றான்.

கூட்டத்திலே இருந்தவர்களில் சிலருக்கு, வந்தியத் தேவனுடைய வீரத் தோற்றமும் அவனுடைய அழகிய முகவிலாசமும் பிடித்திருந்தன.

"தம்பி! நீ சொல்லு! இந்தச் சண்டக்காரர்களுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லு! உனக்குப் பக்கபலமாக நாங்கள் இருக்கிறோம்!" என்று அவர்கள் சொன்னார்கள்.

"எனக்குத் தெரிந்த நியாயத்தைச் சொல்கிறேன். சிவபெருமானும் நாராயணமூர்த்தியும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் சிநேகமாகவும் சுமுகமாகவும் இருந்து வருகிறார்கள். அப்படியிருக்க, இந்த நம்பியும் பட்டரும் எதற்காகச் சண்டை போட்டுக்கொள்ள வேண்டும்?" என்று வல்லவரையன் கூறியதைக்கேட்ட, அக்கூட்டத்தில் பலரம் நகைத்தார்கள்.

அப்போது வீர சைவபட்டர், "இந்தப் பிள்ளை அறிவாளியாகவே தோன்றுகிறான். ஆனால் வேடிக்கைப் பேச்சினால் மட்டும் விவாதம் தீர்த்துவிடுமா? சிவபெருமான் திருமாலைவிடப் பெரிய தெய்வமா, இல்லையா என்ற கேள்விக்கு இவன் விடை சொல்லட்டும்!" என்றார்.

"சிவனும் பெரிய தெய்வந்தான்: திருமாலும் பெரிய தெய்வந்தான் இருவரும் சமமான தெய்வங்கள். யாரை வேண்டுமானாலும் தொழுது கொள்ளுங்கள் சண்டை எதற்கு?" என்றான் வல்ல வரையன்.

"அது எப்படிச் சொல்லலாம்? சிவனும் விஷ்ணுவும் சமமான தெய்வங்கள் என்ற சொல்லுவதற்கு ஆதாரம் என்ன?" என்று ஆழ்வார்க் கடியான் அதட்டிக் கேட்டான்.

"ஆதாரமா? இதோ சொல் கிறேன்! நேற்று மாலை வைகுண்டத் துக்குப் போயிருந்தேன். அதே சமயத்தில் பரமசிவனும் அங்கே வந்திருந்தார். இருவரும் சம ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய உயரம் ஒன்றாகவே இருந்தது. ஆயினும் ஐயத்துக்கு இடமின்றி என் கையினால் முழம் போட்டு இருவர் உயரத்தையும் அளந்து பார்த்தேன்...."

"அட பிள்ளாய்! பரிகாசமா செய்கிறாய்?" என்று ஆழ்வார்க் கடியான் கர்ஜனை செய்தான்.

கூட்டத்தினர், "சொல்லு!" என்ற ஆர்ப்பரித்தார்கள்.

"அளந்து பார்த்ததில் இருவரும் சமமான உயரமே இருந்தார்கள். அதோடு விடாமல் சிவனையும் திருமாலையும் நேரிலேயே கேட்டு விட்டேன். அவர்கள் என்ன சொன்னார்கள், தெரியுமா? "அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவர் வாயிலே மண்ணு" என்று சொன்னார்கள். அவ்விதம் சொல்லி, தங்களைப் பற்றிச் சண்டை போடுகிறவர்களின் வாயிலே போடுவதற்கு இந்தப் பிடி மண்ணையும் கொடுத்தார்கள்!" என்ற கூறிய வல்லவரையன், மூடியிருந்த தனது வலக் கையைத் திறந்து காட்டினான். அதற்குள்ளே ஒரு பிடி மண் இருந்தது. அதைவீசி உதறினான்.

கூட்டத்திலிருந்தவர்களில் பலர் அப்போது பெரும் உற்சாகம் கொண்டு தலைக்குத் தலை தரையிலிருந்து ஒரு பிடி மண் எடுத்து, நம்பியின் தலையிலும் பட்டர் தலையிலும் வீசி எறிய ஆரம்பித்தார்கள். இந்தத் துரோகச் செயலைச் சிலர் தடுக்க முயன்றார்கள்.

"அடே! தூர்த்தர்களா? நாஸ்திகர்களா?" என்று சொல்லிக் கொண்டு ஆழ்வார்க்கடியான் தன் கைத் தடியைச்சுழற்றிக் கொண்டு கூட்டத்திற்குள் பிரவேசித்தான்.

ஒரு பெரிய கலவரமும் அடிதடி சண்டையும் அப்போது அங்கே நிகழும் போலிருந்தன. நல்லவேளையாக, அந்தச் சமயத்தில் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய சலசப்பு ஏற்பட்டது.

"சூராதி சூரர், வீரப்பிரதாபர், மாறபாண்டியன் படையை வீறுகொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றி வேல் உடையார், இருபத்தினாலு போர்களில் சண்டையிட்ட அறுபத்து நான்கு விழுப்புண்களைப் பெற்ற திருமேனியர், சோழ நாட்டுத் தனாதிகாரி, தானிய பண்டார நாயகர், இறைவிதிக்கும் தேவர், பெரிய பழவேட்டரையர் விஜயம் செய்கிறார்! பராக்! பராக்! வழி விடுங்கள்!" என்று இடிமுழக்கக் குரலில் கட்டியம் கூறுதல் கேட்டது.

இவ்வாறு கட்டியம் கூறியவர்கள் முதலில் வந்தார்கள். பிறகு முரசு அடிப்பவர்கள் வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பனைமரக் கொடி தாங்குவோர் வந்தார்கள். பின்னர், கையில் வேல் பிடித்த வீரர்கள் சிலர் கம்பீரமாக நடந்து வந்தார்கள். இவர்களுக்குப் பின்னால் வந்த அலங்கரித்த யானையின் மீது ஆஜானுபாகுவான கரிய திருமேனியர் ஒருவர் வீற்றிருந்தார். மத்தகஜத்தின் மேல் அந்த வீரர் வீற்றிருந்த காட்சி, ஒரு மாமலைச் சிகரத்தின் மீது கரிய கொண்டல் ஒன்று தங்கியது போல் இருந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் சாலையின் இருபுறத்திலும் வந்து நின்றது போல் வல்லவரையனும் வந்து நின்று பார்த்தான். யானை மீது இருந்தவர்தான் பழுவேட்டரையர் என்பதை ஊகித்துக் கொண்டான்.

யானைக்குப் பின்னால் பட்டுத் திரையினால் மூடப்பட்ட சிவிகை ஒன்று வந்தது. அதற்குள் இருப்பது யாரோ என்று வல்ல வரையன் சிந்திப் பதற்குள்ளே, செக்கச் சிவந்த நிறத்துடன் வளையல்களும் கங்கணங்களும் அணிந்த ஒரு கரம் சிவிகைக் குள்ளேயிருந்து வெளிப்பட்டுப் பல்லக்

கின் பட்டுத் திரையைச் சிறிது விலகியது. மேகத்தினால் மூடப்பட்டிருந்த பூரண சந்திரன் மேகத் திரை விலகியதும் பளீரென்று ஒளி வீசுவது போல் சிவிகைக்குள்ளே காந்திமயமான ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது.

பெண் குலத்தின் அழகைக் கண்டுகளிக்கும் கண்கள் வல்ல வரையனுக்கு உண்டு என்றாலும், அந்தப் பெண்ணின் முகம் பிரகாசமான பூரண சந்திரனையொத்த பொன் முகமாயிருந்தாலும் எக்காரணத் தினாலோ வல்லவரையனுக்கு அம் முகத்தைப் பார்த்ததும் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றவில்லை. இனந் தெரியாத பயமும் அருவருப்பும் ஏற்பட்டன.

அதே நேரத்தில் அந்தப் பெண்ணின் கண்கள் வல்லவரைய னுக்கு அருகில் உற்று நோக்கின். மறுகணம் ஒரு பீதிகரமான பெண் குரலில் "கிறீச்" என்ற கூச்சல் கேட்டது. உடனே சிவிகையின் பட்டுத்திரை முன்போல் மூடிக்கொண்டது.

வல்லவரையன் தன் அக்கம் பக்கத்தில் நோக்கினான். தனக்கு அருகில் எதையோ யாரையோ பார்த்துவிட்டுத்தான் அந்த மாது "கிறீச்" சிட்டு விட்டுச் சிவிகைத் திரையை மூடிக்கொண்டாள் என்று அவன் உள்ளுணர்ச்சி சொல்லிற்று. எனவே, சுற்றுமுற்றும் பார்த்தான். ஆழ்வார்க் கடியான் தனக்குச் சற்றுப் பின்னால் ஒரு புளிய மரத்தில் சாய்ந்துகொண்டு நிற்பதைக் கண்டான். அந்த வீர வைஷ்ணவ நம்பியினுடைய முகம் சொல்ல முடியாத விகாரத்தை அடைந்து கோர வடிவமாக மாறியிருப்பதையும் பார்த்தான். வல்லவரையனுடைய உள்ளத்தில் காரணம் விளங்காத திகைப்பும் அருவருப்பும் ஏற்பட்டன.

**வீண்ணகரக் கோயில்**

சில சமயம் சிறிய நிகழ்ச்சி யிலிருந்து பெரிய சம்பவங்கள் விளைகின்றன. வந்தியத்தேவன் வாழ்க்கையில் அத்தகைய ஒரு சிறிய நிகழ்ச்சி இப்போது நேர்ந்தது சாலை யோரத்திலே நின்று பழுவேட்டரையரின் பரிவாரங்கள் போவதை வந்தியத்தேவன் பார்த்துக் கொண்டிருந்தான் அல்லவா? அவன் நின்ற இடத்துக்குச் சற்றத் தூரத்திலேயே அவனுடைய குதிரை நின்று கொண்டிருந்தது.

பழுவேட்டரையரின் ஆட்களிலே கடைசியாகச் சென்ற சிலரின் பார்வை அக்குதிரை மீது சென்றது.

"அடே! இந்தக் குருதையை ப் பாரடா! ஏன்றான் ஒருவன்"

"குருதை என்று சொல்லாதேடா! குதிரை என் சொல்!" என்றான் இன்னொருவன்.

"உங்கள் இலக்கோணா ஆராய்ச்சி இருக்கட்டும்: முதலில் அது குருதையா அல்லது கழுதையா என்ற தெரிந்து கொள்ளுங்கள்!" இன்னொரு வேக்கைப் பிரியன்.

"அதையும் பார்த்து விடலாமடா!" என்று சொல்லிக்கொண்டு, அந்த ஆட்களில் ஒருவன் குதிரையை அணுகி வந்தான். அதன் மேல் தாவி ஏற முயன்றான். ஏறப் பார்க்கிறவன் தன் எஜமானன் அல்ல என்பதை அந்த அறிவுக் கூர்மையுள்ள குதிரை தெரிந்து கொண்டது. அந்த வேற்று மனிதனை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று முரண்டு பிடித்தது!

"இது பொல்லாத குதிரையடா! இதன் பேரில் நான் ஏறக் கூடாதாம்! பரம்பரையான அரசகுலத்தவன்தான் இதன் மேல் ஏறலாமாம். அப்படி யென்றால் தஞ்சாவூர் முத்தரையன்

திரும்பி வந்துதான் இதன் மேல் ஏறவேண்டும்!" என்று அவன் சமத்காரமாய்ப் பேசியதைக் கேட்டு மற்ற வீரர்கள் நகைத்தார்கள்.

ஏனென்றால், தஞ்சாவூர் முத்தரையர் குலம் நசிந்துப் போய் நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது சோழர்களின் புலிக்கொடி தஞ்சாவூரில் பறந்துகொண்டிருந்தது.

"குதிரையின் எண்ணம் அவ்விதம் இருக்கலாம். ஆனால், என்னைக் கேட்டால், செத்துப் போன தஞ்சாவூர் முத்தரையனைக் காட்டிலும் உயிரோடு இருக்கிற தாண்டவராயனே மேல் என்பேன்!" என்றான் மற்றொரு வீரன்.

"தாண்டவராயா! உன்னை ஏற்றிக்கொள்ள மறுக்கும் குதிரை நிஜக் குதிரைதானா என்று பார்த்துவிடு! ஒருவேளை, பெருமாளின் திருநாளுக்கு வந்த பொய்க்கால் குதிரையாயிருந்தாலும் இருக்கலாம்!" என்றான் மற்றொரு பரிகாப் பிரியன்.

"அதையும் சோதித்துப் பார்த்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு குதிரை மீது ஏறப்போன தாண்டவராயன் அதனுடைய வாலை முறுக்கினான். ரோஷமுள்ள அக்குதிரை உடனே முழங்கால்களை நாலு தடைவ விசிறி உதைத்துவிட்டு ஓட்டம் பிடித்தது.

குருதை ஒடுகிறதடா! நிஜக் குருதை தானடா!" என்று அவ்வீரர்கள் கூச்சலிட்டு, "உய்! உய்!" என்று கோஷித்து, ஓடுகிற குதிரையை மேலும் விரட்டினார்கள்!.

குதிரை திருநாள் கூட்டத்துக் கிடையே புகுந்து ஓடிற்று. ஜனங்கள் அதன் காலடியில் மிதிபடாமலிப் பதற்காகப் பரபரப்புடன் அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களில் சிலர் உதைபட்டு விழுந்தார்கள் குதிரை நெறிகெட்டு வெறிகொண்டு ஒடியது.

இவ்வளவும் வந்தியத் தேவன் கண்ணெதிரே அதி சீக்கிரத்தில் நடந்து விட்டது. அவனுடைய முகத்தோற்றத் திலிருந்து குதிரை அவனுடைய குதிரை என்பதை ஆழ்வார்க்கடியான் கண்டு கொண்டான்.

"பார்த்தாயா, தம்பி! அந்தப் பழுவூர்த் தடியர்கள் செய்த வேலையை என்னிடம் நீ காட்ட வந்த வீரத்தை அவர்களிடம் காட்டுவதுதானே!" என்று குத்திக் காட்டினான்.

வந்தியத்தேவனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. எனினும் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமை யைக் கடைப்பிடித்தான். பழுவூர் வீரர்கள் பெருங்கூட்டமாயிருந்தனர். அவ்வளவு பேருடன் ஒரே சமயத்தில் சண்டைக்குப் போவதில் பொருள் இல்லை. அவர்கள் இவனுடன் சண்டை போடுவதற்காகக் காத்திருக்கவும் இல்லை. குதிரை ஓடியதைப் பார்த்துச் சிரித்து விட்டு, அவர்களும் விரைந்து மேலே நடந்தார்கள். குதிரை போன திசையை நோக்கி வந்தியத்தேவன் சென்றான். அது கொஞ்சதூரம் ஓடிவிட்டுத்தா னாகவே நின்று விடும் என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. பழுவேட்டரை யரின் அகம்பாவம் பிடித்த ஆட்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

(தொடரும்...)

விடியல்
இல. 24,
பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

# இதுவும் ஒரு கதை

உச்சி வகிடெடுத்து பேன் பார்த்த நினைவுகள் நிலா முற்றத்தில் மாமா, மாமி எல்லாருமே சுற்றியிருந்து கவளச்சோறு சாப்பிட்ட காலத்தின் நினைவுகள்.. எல்லாமே கனத்தன. எத்தனை பகிடிக் கதைகளை சொல்லிச் சிரிக்கவைப்பா. என்ன சுறு சுறுப்பாக இருப்பா. எல்லாமே எங்கே தொலைந் தது. ஆனால் இப்போ..... இந்த சில நாட்கள்.....? என்ன நடந்தது....? தன் கேள்விக்கெல்லாம தானே ஒரு பதிலை ஊகித்துக் கொண்டாள் நீலாம்பரி. வெற்றுத் தரையில் முந்தானைத் தலைப்பை விரித்து அதில் சாய்ந்து படுத்திருந்தாள் வள்ளியம்மா. தலையணைக்குப் பதிலாக கையை மடித்துவைத்திருந்தாள்.

மாமியாரைப் பார்த்துப் பரிதாபப் பட்டபடி அவளின் அருகே வந்தாள் நீலாம்பரி. “என்ன மாமி, என்ன செய்யுது..? ஏன் இந்த வெறும் தரையில படுத்திருக்கிறியள், தலகணி கூட இல்லாமல்...“நீலாம்பரியின் குரல் கேட்டதும் கண் விழித்துக் கொண்ட வள்ளியம்மா மெல்ல எழுந்து சிவருடன் சாய்ந்து கொண்டாள். எனக்கொண்டு மில்லத் தாயே. நான் சும்மாதான்...” “ஏன் மாமி தலைக்கில இடிக்கிதோ ? இரண்டு பனடோல் தரட்டேயென” “வேண்டாமம்மா. சும்மா அசதியாய்க் கிடந்தது. அது தான் இப்பிடிச் சாய்ஞ்சனான்” என்று வள்ளியம்ம ஒரு புன் சிரிப்பை வலுக்கட்டாயமாக வர வழைத்துக் கொண்டாள். அதுக்குக் கூட என்ன வஞ்சகம் உதட்டளவில் வந்தது முகத்தில் பிரசன்ன மாகாமல் மறைந்து விட்டதே. அகத்தில் அழகிருந்தா லெல்லவா முகத்தில் தெரிவதற்கு.

அடுப்படிக்குள் சென்ற நீலாம்பரி அங்கிருந்த ஒரு பலகைக் குற்றியில் அமர்ந்து கொண்டாள். அடுப்படிதான் அவளின் ஆலோசனை மண்டபம். அந்த பலகைக் குற்றிதான் நீலாம்பரியின் சிம்மாசனம். சமையல் பொருட்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் தான் அவள் உரையாடும் மாந்தர்கள். ஏனென்றால் அவளின் கணவன் அவளுக்கு கட்டளை இடுபவரே தவிர, அவளின் வார்த் தைகளுக்கு காது கொடுப்பவரல்ல. மூர்த்தியின் பழக்கம் அது. நீலாம் பரிக்கும் பழகிவிட்டது.

கங்கு மட்டையும், கொக் காரையும் அடுப்புக்குள் எரிவதுபோல், நீலாம்பரியும் சில வேளைகளில் மனதளவில் எரிந்து போவதுண்டு. கண்கள் புகைந்து போவதும் தான். மூர்த்தி ஒன்றும் கொடுமைக்கரனில்லை. அளவுக்கதிகமான அன்புள்ளவன். ஆனால் அதை மற்றவர்களிடம் எப்படிக்காட்ட வேண்டும் என்ற இங்கிதம்



தெரியாதவன். அவ்வளவுதான். அவளின் மனதின் நினைவுகளைத் தன் மனதில் அவளால் உட்கார வைக்க முடிய வில்லை. அவளின் உத்தரவின்றியே அவைகள் வெளிநடப்புச் செய்து கொண்டன. மாமிக்கு எங்களோட இருக்க விரும்பவில்லை. அவ மகளோடை தான் இருக்க விரும்புறா

போல கிடக்குது அவ எதைத் தொலைத்தா..? தான் வளர்த்த பாசத்தையா..? தன்னை வாழ வைத்த பாசத்தையா..? அவளின் கேள்விகள் முற்றுப் புள்ளி தேடித் தவிக்கும் வேளையில் உள்ளே மூர்த்தி வந்தான். "என்னப்பா என்ன செய்யுறாய். கொஞ்சம் தேத்தண்ணி போடப்பா" என்றவனைத் அண்ணார்ந்து பார்த்தாள் நீலாம்பரி.

அந்த பார்வையில் ஒரு தவிப்பிருந்தது. தான் சொல்லப் போறதைத் தன் கணவன் பொறுமையாகக் கேட்டுப்புரிந்துகொள்வாரா என்ற நினைப்பும் இருந்தது. இருந்தாலும் தன் மனது கனத்த அந்த நினைவுகளை வார்த்தைகளாக்கி மெல்லத் கூறத்தொடங்கினாள். "இஞ்ச பாருங்கோ! தேத்தண்ணி குடிக்க முன்னம் இதையும் கேளுங்கோ " "எதைக் கேட்கிறது..? " "நான் சொல்லுறதைத்தான்." "இப்ப உதைக் கேட்டுக் கொண்டு இருக்கேலாது." "அப்ப எப்ப ஏலும். கேளுங்கோப்பா" "சரி, சரி சொல் கெதியாச் சொல்லு." "மாமியைக் கூட்டிக்கொண்டுபோய்....." "கூட்டிக் கொண்டுபோய்..." "மச்சாளோட விட்டிற்று வாங்கோ." "ஏன்..?" "இஞ்சை அவ சந்தோசமாக இல்லை. அவாவுக்கு இஞ்சை பிடிக்கேல்ல" "அவவுக்கு இஞ்சை பிடிக்கேலையோ..? இல்லாட்டா...." "என்ன சொல்லுறியள்..? " "உனக்கு பிடிக்கலையோ என்று கேட்கிறேன்." "இஞ்சை அவாக்கு சரிப்பட்டு வராது." "ஏன் சரிப்படடு வராது." "அப்படித்தான். புரிஞ்சுக் கொள்ளுங்கோப்பா. அவ இங்க இருக்க விரும்பேல்ல." "அதுதான்... அதுதான் ஏன் என்டு கேட்கிறேன்." "அதுகளை விட்டுத் தான் தனியாக இருக்கிறேன் என்டு நினைக்கிறா." "அவ இருப்பா. ஏன் இஞ்சை நான் இல்லையே?" "அவ உங்களை மட்டும் வளக்கேல்ல. மச்சாளையும் அவதான் பொத்தி பொத்தி வளர்த்தவா. எனக்கு தெரியும்." "அதுக்கு" "அவவை மச்சாளோடை விட்டுட்டு வாங்கோ என்டு தான் சொல்லுறன்." "அவ ஒண்டும் உன்ரை தலையிலை இருக்கேல்ல." "என்ன சொல்லுறியள்?" "நீ ஒண்டும் காவிச் சுமக்க வேண்டாம் அவ இஞ்சைதான் இருப்பா. சொல்லிப் போட்டன்" நீலாம்பரியின் உணர்வுகளை மூர்த்தியால் புரிந்துகொள்ள முடியவில்லை. புரிந்து கொள்ளுமளவுக்கு அவனுக்கு பொறுமை இருக்கவில்லை.

மனைவியுடன் எதையும் கலந்தாலோசிக்கும் தன்மை மூர்த்திக்கு எப்பவுமே இருப்பதில்லை. மூர்த்தியின் வார்த்தைகள் வரம்பை மீறிக் கோபத்துடன் வந்தன. அந்த வார்த்தைகளின் சுவாலைகள் நீலாம்பரியின் உணர்வுகளை வேக வைத்தது. அதனால் நொந்து போன நீலாம்பரி சினம் கொண்டாள். அவளின் அந்த நேரச்சினம், கணவன் தன் உணர்வுகளை, தான் சொல்ல வந்தவைகளை புரிந்துக் கொள்ளாமல் விவாதம் பண்ணிய முறைகள் எல்லாம் சேர்ந்து அவள் சொல்ல வந்தவைகளைச் சொல்ல முடியாமல் செய்து விட்டன. அவளின் வார்த்தைகள் உதட்டில் உரசியபடி சூடாக வந்தன. "ஏன் உங்கடை தங்கச்சியால பெத்த தாயை பாக்க முடியாதாக்கும்" "நான் என்ன போடு தடியோ? ஏன் நான் உங்கடை அம்மாவை பாக்கவேணும்." என்று நீலாம்பரியின் உதடுகள் கோபத்தில் துடித்தன. "நீலாம்பரி! நீ நிதானமாய்த் தான் பேசுறியே?" "நான் என்டைக்கு நிதானமில்லாமல் பேசினான்." "இண்டைக்குத்தான்" "இல்லை, நீங்கள் எப்ப தான் நின்டு நிதானமாய்க் கேட்டிருக்கிறியள்." நீங்கள் சொன்னதை உங்களுக்கு சரியெண்டதை நாங்கள் கேட்க வேணும். கேட்டால் சரி. அதுதான் உங்கடை நியாயம். கோபத்தில் அவளின் வார்த்தைகள் அடுப்பில் உலை கொதிப்பது போல் பொங்கிச் சரிந்தது.

மூர்த்தி மௌனமானான். அவனின் மௌனத்தைக் குறிபார்த்து நீலாம்பரியின் வார்த்தைகள் அம்பாகத் பாய்ந்தன.

"மாமாவை மட்டும் அவ அங்கை வைச்சு தோட்டவேலை , தொட்டாட்டு வேலை எண்டு செய்விக்க நான் இஞ்சை கிழவியை வைச்சு பார்க்கவேணும். என்ன இது எந்த ஊர் நியாயமெண்டு கேட்கிறேன்." "எனக்கென்ன தலைவிதி. அப்பிடி ஒண்டும் என்ர தலையில எழுதேல்ல" என்றவளின் வார்த்தைகள் எண்ணைச் சட்டியில் போட்ட கடுகு போல் வெடித்துப் பொரிந்தது. நீலாம்பரியின் வார்த்தைகளால் மேலும் கடுப்பானான் மூர்த்தி. "இஞ்சை பார் நீலாம்பரி, நீ என்ன சொன்னாலும் அம்மா இஞ்சைதான் இருப்பா" என்றவன் கோபமாக நீலாம்பரியின் முகத்தைப் பார்த்தான். "இருக்கட்டும் நல்லா இருக்கட்டும். ஆர் வேண்டா மெண்டது" இது நீலாம்பரியிடமிருந்து வந்த உயிர்ப்புள்ளவார்த்தைகள். மூர்த்திக்கு ஒன்றும் புரியாமல் விழித்தான். "இவ்வளவு நேரமும் புளியமரத்தில் நிண்டு சன்னதமாடிய பிசாசு எப்படி இறங்கியது" என்று நினைத்துக் கொண்டவன் நீலாம்பரியின் அடுத்த வார்த்தைக்காக காத்திருந்தான்.


"மாமி இஞ்சை இருக்கிற தெண்டால் இருக்கட்டும். ஆனால் மாமாவையும் இஞ்சை கூட்டிக் கொண்டு வாங்கோ" என்றவள் சற்று நிதானத்துடன் மூர்த்தியைப் பாரத்தாள். "எனக் கொண்டும் பெரிய கரச்சலில்லை" என்டவள் மூர்த்தியின் பதிலுக்காக காத்திருக்காமலே அங்கே வெறுமை யாகக் கிடந்த தண்ணிக் குடத்தை விறுக்கென எடுத்துத் தன் கணவனைப் பார்த்துக் கொண்டேவெளியே நகர்ந்தபடி "எங்களுக்கும் தோட்டம், துறவு கிடக்கு" என்றுக் கூறிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். நீலாம்பரி தாய் தகப்பனுக்கு ஒரே மகள். மிகவும் செல்லமாக வளர்ந்தவள் பலாலியில் பெரிய வீடு, வளவு, தோட்டம் துரவு எண்டு வாழ்ந்த பெரிய விவசாயக் குடும் பந்தான். காலம் செய்தகோலம். எல்லாவற்ரையும் இழந்து உயிரை மட்டும் காவி அகதிகள் என்ற ஒரு புதிய சாதியாக உருவாக்கப்பட்ட எத்த னையோ குடும்பத்தில் நீலாம்பரியின் குடும்பமும் ஒன்றுதான்.

அதன் பிறகுதான் மல்லாகத்தில் இந்தக் காணியை வாங்கி மெல்லத் மெல்லத் தலை எடுக்கின்றார்கள். தகப்பன் தாய் நீலாம்பரியின் திருமணத்தின் பின்னர் வன்னியில் மாங்குளத்தில் மூன்று ஏக்கர் காணி வாங்கி தோட்டம், வயல் என்று விவசாயம் பண்ணுகின்றார்கள். நீலாம்பரி பிடிவாதக்காரி. நினைத்ததைச் சாதித்து விடுவாள். இரக்கமான மனம் கொண்டவள், எல்லா வற்றையும் மூர்த்தி நன்றாகவே அறிவான். படலையடியில் ஆட்டோ நிற்கும் சத்தம் கேட்ட வள்ளியம்மா மெல்லத் தலையை நிமித்திப்பார்த்தாள். படலையைத்திறந்து கொண்டு மூர்த்தி வந்து கொண்டிருந் தான். அவனைத் தொடர்ந்து அவனின் பின்னால் வள்ளியம்மாளின் கணவன் மாணிக்கத்தார் கையில் ஒரு உரப்பை மூட்டையுடன் வந்து கொண்டிருந்தார்.

(தொடரும்....)

**ஆர்.எஸ்.ஆனந்தன்**

# யாருக்கு வோட்டு?




ஏய்க்கிறாரு பாரு நம்மை
ஏய்க்கிறாரு பாரு
பதவி காக்கப் பொய்கள் நிதம்
பேசிறாரு பாரு.

ஆறு ஏழு ஆண்டுக்கொரு
முறை வருவார் பாரு
அப்பொழுதும் இருந்தது போல்
இருந்திடும் எம் ஊரு.

மாலை போடப் போகையிலே
கழுத்தை நீட்டு வாரு
வேலை ஏதும் கேட்டுவிட்டால்
பாதை மாறு வாரு.

குறைகள் சொன்னால்
அவருக் கென்றும் புரியாது பாரு
ஆனாலும் தலையை மட்டும்
ஆட்டுவாரு பாரு.

வோட்டுக் கேட்க மட்டுமெங்கள்
ஊருக்கு வரு வாரு
வோட்டுப் போட்டு வெற்றிபெற்றால்
நாடு மாறு வாரு.

உரிமை கேட்டு அலுத்துப் போச்சு
எங்கள் மக்கள் கூட்டம்
அணியணியாய் நாமெழுந்தால்
அடங்கிடும் அவர் ஆட்டம்.

போடாமல் விட்டிடாதை
பெருமையான வோட்டு
நல்லவரைத் தெரிந்து கொண்டு
அவருக்கே நீ போடு.

மாவன்னா



# உண்மையை பேசக்கூடாது

"யதார்த்தவாதி வெகுசன விரோதி" இந்த மொழிக்கு மிக கனக்கச்சிதமாக பொருந்துபவர் M.A.சுமந்திரன் அவர்கள். உண்மையை நறுக்கென வெட்டொன்று துண்டொன்று என வெளிப்படையாக பேசுவதனால் அவர் பெரும்பாலானவர்களின் வெறுப்பினை இன்றளவும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். ஆனாலும் அவர் உண்மைகளையும் நடக்க இருப்பவைகளையும் மட்டுமே இன்றும் பேசிக்கொண் டிருக்கிறார்.

அரசியலமைப்பின் வரைபுகள் தொடர்பாகவும் சமஷ்டி தொடர்பாகவும் தொடர்ந்தேர்ச்சியான இயங்கும் நிலையில் இருப்பவரும் அவரே. தமிழர் தலைவிதியிணை தீர்மானிக்கின்ற சக்தியாக இப்பொழுது பெரிதும் பிரஸ்தாபிக்கப்படுகின்ற நபரும் அவரே.

காலம் காலமாக சிங்கள ஏகாதிபத்தியம் தமிழர்களை ஏமாற்றியபடியே இருக்கிறது. இன்றும் அது தொடர்ந்த வண்ணமே உள்ளது. என்ன இருந்தாலும் சிங்கள தலைமைகளிடம் எமக்காக முழு உரிமைகளையும் நேரடியாக பெற்றுக்கொள்ள முடியாது என்பதனை இக் கட்டுரை சொல்லித்தான் தெரிந்து கொள்ளுமளவிற்கு எவரும் முட்டாள்கள் அல்ல.

ஆனால் போரினூடாகவோ அல்லது இராஜதந்திர நகர்வுகளினூடாகவோ மாத்திரம் தான் உரிமைகளை பெற்றெடுக்க முடியும் என்கின்ற இரண்டு தெரிவுகள் மாத்திரமே தமிழருக்கு உண்டு. இதில் முதலாவது தெரிவு எவ்வகையிலும் தற்போதைக்கு சாத்தியமற்றது. ஆனாலும் சில அரசியல்வாதிகள் மக்களின் உணர்ச்சிகளில் ஏறி இருந்துகொண்டு போராட்ட சிந்தனைகளை விதைத்துக் கொண்டிருப்பது தற்போதைய யதார்த்த நிலைக்கு பொருத்தமானதா என்கிற வினா எல்லோரிடமும் இயல்பாகவே எழுவது தவிர்க்க முடியாது.

இவ்வாறு அறிக்கைகளினாலும் உணர்ச்சிகளினாலும் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என கூக்குரல் இடுபவர்களுக்கு திரு.M.A.சுமந்திரன் அண்மையில் கரவெட்டி வடமராட்சி



தெற்கு மேற்கு பிரதேச சபை வளாகத்தில் தியாக தீபம் திலீபன் அவர்களின் நிகழ்வினை தொடர்ந்து ஆற்றிய உரையில் மிக பட்டவர்த்தனமாக கேட்டிருந்தார்.

உலகில் தலைசிறந்த காலற்படையையும் விமானப்படையையும் கடற்படையையும் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை விட உங்களால் ஒரு போராட்ட அமைப்பினை கட்டி எழுப்ப முடியுமா? என்று தொடுத்த வினாவின் ஊடாக ஆயுதப் போராட்டத்தினால் உரிமைகளை வென்றெடுக்க முடியவில்லை என ஆதங்கப்படுகின்றார். அதுவும் உண்மையே. தமிழினம் இன்னொரு முறை முள்ளிவாய்க்காலினை சந்திப்பதற்கு மனதளவில் கூட தயாரில்லை.

ஆக இரண்டாவது தெரிவாக இருப்பது அரசியல் ரீதியாக வென்றெடுப்பது. இதன் சாத்திய தன்மைகளை அறிதல் முக்கியமானது. உள்ளக நிர்ணயம் என்பதால் ஏற்றுக்

கொள்ளப்படுகின்ற சகல உரிமைகளும் கிடைக்கின்ற பொழுது அதனை ஏற்றுக்கொள்வது தமிழர்களுக்கு நன்மை பயக்குவதாகும்.

ஆனால் சமஷ்டி எனும் சர்ச்சைக் குள் இன்று தமிழ் தலைமைகள் சிக்குப்பட்டு சின்னாபின்னமாய்ப் போயி ருக்கிறார்கள் என்றால் அது மிகையா காது. சமஷ்டி என்ற ஆட்சிமுறைக்குள் உள்ளடக்குகின்ற அத்தனையையும் ஏதோ ஒரு ஆட்சிமுறைக்குள்ளால் பெற்றுக்கொள்ளலாம் என்றால் அதனை பெற முனைவதே இராஜதந்திரமாகும். அதாவது அதன் உள்ளடக்கங்கள் சமஷ்டிக்கு ஒப்பானதாக காணப் படுமாயின் அதனை ஏற்றுக்கொள்வதில் தவறொன்றும் இருப்பதாக தெரிய வில்லை.

முப்பது வருட போராட்ட முடிவில் தமிழர்கள் மத்தியில் ஒரு கையாலாக தனம் காணப்படுவது உண்மையே. அரசியல்வாதிகள் நேரெதிரிக்கு முகம் கொடுப்பதனை விட்டு விட்டு தங்களுக்குள்ளேயே உரசிக்கொள்வது எத்தனை அபத்தமானது. இதற்கு சில ஊடகங்கள் தூபம் போடுவதும் வெளிப்படை. தனிப்பட்ட காழ்ப்புணர் வுகளை ஊடகங்கள் பொது பிரச்சனை களாக சித்தரிக்க முனைவது காலப் போக்கில் அவர்கள் மீதான நம்பிக்கை யீனத்தை ஏற்படுத்தும்.

சிங்கள தலைமைகளிடம் இருந்து தமிழர் உரிமைகளை போதிய அளவில் வெளிப்படையாக பெற்றுக் கொள்ள முடியாது என அறிந்தும் தமது அரசியல் இருப்பினை தக்கவைத்துக் கொள்ள சில அரசியல் கட்சிகள் தமிழ் இனவாதம் பேசுகின்றன. இதன் விளைவு இரத்தமின்றி கத்தியின்றி ஆனாலும் வலி தரும் ரணங்களை தமிழர் சுமக்க நேரிடும் என்பதனை கிஞ்சித்தும் உணர்கிறார்கள் இல்லை.

இந்த நிலையில்தான் ஒற்றை யாட்சிகள் தீர்வு என்பதன் பெயரில் சமஷ்டிக்குள் இருக்கவேண்டிய அத்தனை உள்ளடக்கங்களுடனும் பெற்றுக்கொள்வதிலேயே தமிழர் தரப்பின் இராஜதந்திரம் முனைப்பு பெற வேண்டும். ஆனால் சில அரசியல் வாதிகள் பெயர்ப்பலகைகளை தந்தால் மட்டுமே போதும் என கருதுகின்றனர். ஒரு கட்சிக்குள் இருந்து கொண்டு அக்கட்சியை எதிர்க்கின்ற அறமின்றிய செயற்பாடுகளையே இன்று தமிழர் தலைமைகளின் நிலைபாடாக காணப்படுகிறது. அந்த கட்சிக்குள் உள்ள முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளாமல் தான் சார்ந்த கட்சிக்கு விரோதமாயும் இன்னொரு கட்சியின் விசுவாசமாகவும் இருக்கக்கூடிய தலைமைகள் மீது தமிழ் மக்கள் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும் என்ற கேள்வி இன்று மேலெழுந்து நிக்கிறது.

எனவே தமிழர்கள் தங்களை தாங்கயே சுயவிமர்சனம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாயிருக் கிறது. உலக மயமாக்கலால் ஒவ்வொரு நாடும் தமது நலன் சார்ந்து செயற்படுகிற பொழுது தமிழர்களுக்கான தீர்வு என்பது சர்வதேசம் பொறுத்து அது இரண்டாம் தெரிவாக காணப்படுகின்றது. பூகோள அரசியலில் இதற்கான சாதகமான தோற்றப்பாடுகளே காணப்படுகின்றது. மீண்டும் தமிழர்களை சர்வதேசம் கைவிடப்போகிறது என்பதனை அண்மைக்கால நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றது.

ஆகவே தமிழர்கள் இன்றைய அரசியலின் நிகழ்போக்கினை உன்னிப்பாக அவதானித்து சாதக பாதகங்களை சீர்தூக்கி பார்க்க வேண்டியது கட்டாயம் ஆகும். இவ்வகையான இராஜதந்திரங்களை ஊடாக எமக்குரிய உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு எத்தனிக்க வேண்டும்.

**வர்ணன்**

# குந்த ஒரு குடிநிலம்

வெறும் சடப்பொருளான மண்ணுக்காக
எத்தனை சாவுகள்?
ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு
ஊடகமான மொழிக்காகவா
இத்தனை மரணங்கள்?
இப்படி அங்கலாய்ப்போர் இருக்கின்றனர்.
இந்த போரினால் இறந்து போனவர்களுக்குள்ளே
எத்தனை "பாரதிகள்"
எத்தனை "மக்சிம் கார்க்கிகள்"
எத்தனை "டால்ஸ்டாய்கள்"
எத்தனை "மார்கோனிகள்"
இன்னும்
"ஐசாக் நியூட்டன்கள்"
"மேரிகியூரி" அம்மைகள்
எத்தனைபேர் இருந்தார்களே?
அத்தனை பேரும் அழிந்துவிட்டார்களே!
இப்படி மூக்குநீர் சிந்தி
முட்டைக் கண்ணீர் வடிப்போருண்டு.
விரிந்த இந்த உலகமே
மனிதன் வாழ்வதற்காகத்தானே
இதில் தமிழனுக்குத் தனிநாடு வேண்டுமா?
இப்படிக் கேட்போர் இன்றும் இருக்கின்றார்கள்.
கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு
முன்தோன்றியது தமிழென்றால்,
அந்த முதற் தமிழன்
காலெடுத்து நடந்த நிலம் எது?
அவன் மலம் கழித்துவிட்டு கழுவியது எதனால்?
இப்படி அங்கதம் கமழ ஆரவாரிப்போர் உண்டு.
எல்லாவற்றையும் சேர்த்துக் கோர்த்தால்.....
இவர்கள் எழும்புவதும்
எதிரொலிப்பதும் என்ன?
சரியாக நிலம் வெளிக்காத "இளம்காலைப் பொழுதுகள்"
பகலாகாது இரவானது கொடுமையாம்.
சரி,
அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்.
ஆனால்....
"உயிர்ப்புடன் பிறந்தவையெல்லாம் போராடுகின்றன."
இந்தத் தத்துவம்
இவர்களுக்கு மட்டும்
புதைந்து போன செப்பேடுகள் ஆனது ஏன்?
போராட்டம் பூப்பறிக்கும் வேலையென்று
இவர்களுக்கு பாடம் கற்பித்த பரமபிதா எவன்?



குருதி சொரியாது உரிமை பெற்றதுக்கு
ஒரு உதாரணம் சொல்லட்டும் பார்க்கலாம்.
"தமிழீழம்"
இவர்களுக்கு கனவாக இருக்கலாம்.
கைகளில் எட்டாத வானமாக இருக்கலாம்.
போராடும் எங்கள் மக்களுக்கு
கையள்ளி மகிழும் காலடி மண்தான்.
எட்டிப்பிடிக்கக்கூடிய தாயின் மடிதான்.
விரிந்த காலுடைய "கும்பிடு பூச்சிகளான"
இவர்களுக்கு
ஆபிரிக்கா அத்தை வீடாகவும்,
அமெரிக்கா அக்கா வீடாகவும் இருக்கலாம்.
எங்கே, இந்தச் சர்வதேச வாதிகள்
அத்தை வீட்டுக்குள்ளே...
அனுமதியின்றி நுழையட்டும் பார்க்கலாம்?
இவர்களுக்கு
உலகம் ஒரே கூரையின் கீழ் உறங்குகிறதாம்.
ஆனால்...
கூரை ஒன்றானாலும்
குடியிருப்புக்கள் வேறு வேறு என்பது
இவர்களின் அகராதியில் மட்டும்
அச்சழிந்து போய்விட்டதா?
"தமிழீழம்" வெறும் மண்ணாகவா
இவர்களின் கண்களுக்கு தெரிகிறது
இந்த மண்ணில் தானே
எங்கள் நூறு தலைமுறையே புதைந்து கிடக்கிறது.
மூன்றடி தோண்டினால் போதுமே
நம் முன்னோர்களின் எலும்பு கூடுகள் தலை நிமிர்த்தும்
இங்கு வீசும் காற்று வெறும் காற்று மட்டும் தானா
எங்கள் பரம்பரையின் மூச்சும் அதில் கலந்திருப்பது
இவர்களின் சுவாசத்திற்கு ஏன் தெரியாமல் போனது
முற்றத்தில் நிற்கும் பலா மரத்தைக் கீறினால்....
வடிவது பால் மட்டும் தானா?
எங்கள் முந்தையரின்
குருதியும், வியர்வையும் கொப்பளிப்பது
இவர்களுக்கு மட்டும் ஏன் தெரியவில்லை?
எங்கள் கோவில் வீதிகள்
வெறிச்சோடிப்போன வெறும் வெளி மட்டும் தானா?
யார் சொன்னது?
எமது பாட்டன் ராமன் வேடம் தரித்து
மேடையில் நின்ற போது
பாட்டி தன்னை சீதையாக உருவகித்து
மனதுக்குள்ளே.....
மாயமான் கேட்டு நின்ற மண்ணல்லவா?
எப்படி எங்கள் தாய் நிலமும்



அரபு பாலைவனமும் ஒன்றாக முடியும்?
இவர்களுக்கு எல்லைகள் தொல்லைகளாக இருக்கலாம்
ஆனால் எல்லாவற்றிற்கும் எல்லைகள் இருக்கின்றனவே.
கடலுக்கு நிலமும்
நிலத்திற்கு கடலும் எல்லைகள் ஆகும் போது
எங்கள் தாய் நிலத்திற்கு மட்டும்
வேலிகள் வேண்டாமா?
வெள்ளிக்கிழமை விரத சாப்பாட்டின் பின்னர்
சாணி மெழுகிய திண்ணையில்
சரிந்துபடுக்கிற இன்பம் இருக்கிறதே
இது இங்கன்றி
வேறு எந்த மண்ணில் ஏற்படும்
தாய் மடிதானே சந்தோசம்.
அழகில்லை என்பதற்காக
என்னைப் பெற்ற ஆச்சி
எப்படி அடுத்த வீட்டுக் கிழவி ஆகமுடியும்?
அழகானவள் என்பதற்காக
அடுத்த வீட்டுக் கிழவி
என்னைப் பெற்றவள் ஆகமுடியுமா?
ஊத்தை உடுப்பென்றாலும்
ஆச்சியுடன் ஒட்டியிருக்கும் சுகமிருக்கிறதே
அதைவிடச் சுகம் எதுவுமே இல்லை.
சப்த சமுத்திரங்களுக்கும் சொந்தம் கொண்டாடும்
சர்வதேச வாதிகளுக்கு
மட்டக்களப்பு வாவியின் மகிமை தெரியாது.
"நைல் நதி தீரமும்" நமதென்று சொல்பவர்களுக்கு
கீரிமலைக் கேணியின்
ஊற்று நீரின் உன்னதங்கள் புரியாது.
"அல்ப்ஸ் மலை" அழகுதான்
அதற்காக
கோணமலை கோலமலை ஆகிவிடாது.
எங்களுக்கு.....
பாய் விரித்துப் படுத்துறங்கவும்,
அச்சமின்றி ஆடிப்பாடவும்,
குந்த ஒரு குடிநிலம்
சொந்தமாக வேண்டும்.
"எல்லை போட்ட கொல்லை"
இது தான் எங்கள் குறிக்கோள்!

*ஈழத்துக் கவிஞர் புதுவை*
*இரத்தினதுரை வியாசன்*
*என்னும் பெயரில் விடுதலைப்*
*புலிகள் பத்திரிகையில்*
*எழுதிய உலைக்களம்*
*கவிதையினை*
*இங்கு பிரசுரிக்கின்றோம்*
*காலத்திற்கு பொருத்தமற்றதாக*
*இருப்பினும் கவிதை வீச்சையும்*
*சொல் ஆழத்தையும்*
*விடுதலைவேட்கையும்*
*இளைய சமுதாயம் புரிந்து*
*கொள்ள வேண்டும் என்பதற்காக*
*இது பிரசுரமாகிறது.*

# வாளுக்கும் கத்திக்கும் வித்தியாசம் தெரியாத பொலிஸ் பொறுப்பதிகாரி

இந்த இடத்தில் தான் எங்களுக்கு இந்த ஊடகத்துறையின் உதவி தேவையாக இருக்கிறது. அதாவது ஊடகத்தில் வேலை செய்யும் இளைஞர்களோ, யுவதிகளோ ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணியிலிருந்து வழக்கு முடியும் வரை நீதிமன்றத்தில் அமர்ந்திருப்பார்கள் எனில் எங்களுக்கு மிகவும் சந்தோசம்.

ஏனெனில் அண்மையில் நடந்த வழக்குதான் வாள்வெட்டு வழக்கு. அனைவரும் விடுதலை. அந்த குறித்த குற்றவியல் பொறுப்பதிகாரி யாழ்ப்பாண குற்றவியல் பொறுப்பதிகாரியிடம் நாங்கள் கேட்ட கேள்விகள் என்றால் அவர் நாக்கை பிடுங்கி சாகுமளவிற்கு கேள்விகள் கேட்டனாங்கள். அவரால் எந்த இடத்திலும் பதில் சொல்ல முடியவில்லை. வாள் தான் சான்றுப் பொருள் என்று சொல்லுகிறார், அவனிடம் கத்திதான் இருக்கிறது. வாளை தீட்டியவனை கொண்டுவந்திருக்கிறோம் என்றார், அவன் கத்தியைத்தான் தீட்டினான் என்று சொன்னான். இது எங்கையாவது பத்திரிகையில் வந்திருக்கிறதா? 15 வாள்கள் என்று சொல்லுகிறார்கள், ஆனால் ஒரு கத்திதான் இருக்கிறது. எங்கே அந்த சான்றுப் பொருட்கள்?

எந்த பொறுப்பதிகாரியும் வழக்கு விசாரணை செய்யும் போது அவர்களிடம் ஒரு சிஐவி புத்தகம் இருக்கும். குற்றவாளிகளை எப்போது பிடித்தோம் யாரை கைது செய்தோம் எங்கே போனோம் எந்த வாகனத்தில் போனாம் எந்த நேரம் சென்றோம் என்று எல்லா விடயமும் எழுதி வைத்திருப்பினம். கேள்வி கேட்கிறேன், நாலைந்து புத்தகத்தை புரட்டி புரட்டி பார்க்கிறார். வழக்கு ஒன்று, சம்பவம் நடந்த இடம் ஒன்று, ஆனால் கையில நாலைந்து புத்தகம் தான் இருக்கு. மிகுதி புத்தகம் கொண்டு வரவில்லையாம். இன்று வழக்கு உள்ளது என்று தெரியும். அந்த பொறுப்பதிகாரிக்கு தான் ஒரு முக்கிய சாட்சி என்றும் தெரியும், தான் தான் இத்தனை சந்தேகநபர்களையும் பிடிச்சு பெரிய புலன் விசாரணை செய்தது என்று பெயரும், ஆனால் அந்த வழக்கிற்கு அவர் தயாராக வரவில்லை.

கேள்விகள் கேட்டு அவரால் பதிலளிக்கமுடியாத இடத்தில் அவரின் பிழை அறிந்து நீதிமன்று பொலிஸ்மா அதிபருக்கு அவருடைய மேலிடங்களுக்கு வழக்கு நடவடிக்கையின் போதே இன்னென்ன விடயங்கள் தொடர்பாக இவ்வளவு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று எழுத்து மூலமாக பதிந்திருந்தது.

எங்களுக்கு கேட்கின்ற ஒவ்வொரு கேள்விகளும் எங்களுக்கே ஆபத்தாக இருக்கலாம். எங்கள் எதிர்காலத்திற்கே ஆபத்தாக இருக்கலாம். அவ்வளவும் பதிவில் இருக்கிறது. இங்கு எங்கே இந்த ஊடகத்துறை. அது எல்லாவற்றையும் மறைத்து விட்டு பத்திரிகையில் தலைப்பு வரும் "வாள்வெட்டில் கைதாகி அனைத்து குற்றவாளிகளும் விசாரணையின் பின்னர் விடுதலை" என்னத்திற்கு விடுதலை ஆனார்கள் எவ்வாறு விடுதலை ஆனார்கள் என்பது ஒன்றும் வராது.

இன்னொரு விடயம் நான் ஒரு வாள்வெட்டு வழக்கில் சந்தேகநபர்களை ஆயர்ப்படுத்துகிறேன். பொலிஸ் நிலையத்தில் இருந்து எனக்கு தொலைபேசியில் அழைப்பு வருகிறது இன்னொரு சந்தேகநபரின் பெற்



றோர்கள். எங்களுக்கு பொலிஸ் சொல்லுகிறார்கள் இவரை ஆயர்ப்படுத்தி வழக்கை முடிப்போம். நாங்கள் பிள்ளையை கூட்டிக்கொண்டு போகிறோம். "பணம் பாயுது" இதனை யாரிடம் கூறுவது? இந்த இடத்தில் நீதிமன்றுக்கு சொன்னோம் நாலைந்து சந்தேகநபர்கள் வரவேண்டிய இடத்தில் இரண்டு மூன்று சந்தேகநபர்களை வைத்து வழக்கு முடிக்கிறார்கள். மற்றவர்கள் வெளியில போகிறார்கள். இதில் பணம் பாயுது.

நன்றி
**இணையம்**

# அமைதியை இழக்காதீர்கள்

அமைதி, பொறுமை போன்றவை ஒரு மனிதனின் வெற்றிக்கு அத்தியாவசியமானவை. எந்தவொரு முயற்சியிலும் வெற்றியைப் பெறுவது என்பது அத்தனை எளிதல்ல. அதற்கு நிறைய தடைகள் வரும். பிரச்சனைகள் வரும். இடையூறுகள் வரும். அதையெல்லாம் எதிர்கொண்டு உங்கள்



லட்சியத்தில் நீங்கள் வெற்றி பெற வேண்டியிருக்கும். அதற்கு அமைதியாகவும் பொறுமையாகவும் செயல்படுவது மிகவும் முக்கியத் தேவை.

நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்துக்கொண்டிருக்கலாம். உங்கள் மேலதிகாரிக்கு உங்கள் மீது ஏனோ ஒரு வெறுப்பு இருக்கலாம். அதனால் எந்தவொரு காரணமும் இன்றி உங்களை அவர் திட்டிக்கொண்டிருக்கலாம். உங்களை பற்றி குறை கூறிக்கொண்டே இருக்கலாம். இதனால் நீங்கள் எரிச்சலோ, ஆத்திரமோ அடைவது தவறு. பொறுமையோடும், அமைதியோடும் இருக்க வேண்டும். இதற்கொரு எல்லை உண்டு என்பதில் முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும். சரியான தருணம் வரும் போது அந்த அதிகாரிக்கு உரிய தண்டனை கிடைத்தே தீரும்.

**குன்றில்குமார்.**















விடியல் சஞ்சிகையின் 2018 ஆவணி மாத இதழ் அறிமுக விழா வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பொதுமண்டபத்தில் நடைபெற்ற பொழுது நூலை அறிமுகம் செய்து கட்டைக்காடு பங்குத்தந்தையினால் வெளியிட்டு வைக்க அதனை ப.உமாகாந்தன் பெற்றுக்கொள்வதனையும், கரவெட்டி பிரதேச சபை தவிசாளர், பருத்தித்துறை நகர சபை தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் ஆகியோரால் சமூக சேவையாளர்கள் பொன். தங்கராசா, இ.சண்முகநாதன், த.தனேஷ் ஆகியோர்களை கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.


நியூ யாழ் பாம்
New Yarl Farm
The Agric Business
பழமரக்கன்றுகள், பூங்கன்றுகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
T.P. No. 0767102055
0782325228
பருத்தித்துறை பிரதான வீதி,
சாரையடி, புலோலி.


AMAAGE Restaurant
Main Street, Point Pedro.
Amaage
Restaurant
விரும்பிய சகலவிதமான உணவுகளை
சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
பிரதான வீதி, பருத்தித்துறை
Main Street, Point Pedro